தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவராண்டு – 2029 வெகுதானிய

புரட்டாசி

துணர் : 72] அக்டோபர் - 1998 [மலர் : 6

தமிழ்ப்பொழில்

பதிப்பாசிரியர் : *பாவலர்.ச.பாலசுந்தரம்*

உள்ளுரை

1. அறிவு [illegible]

2. கிறித்தவ இலக்கியங்களில் சமயப் பொதுமை

   முனைவர்.இர.ஆரோக்கியசாமி [illegible]

3. பாவேந்தரின் தாலாட்டுப் பாடல்கள்

   முனைவர்.தா.ஈசுவரப்பிள்ளை 20[illegible]

4. திருச்சி மாவட்ட ஓலை ஆவணங்கள்

   மொ.மருதமுத்து 219

5. ஒப்பீட்டு நோக்கில் மனுநெறித் திருநூல்

   திருமதி.சு.சந்திரா 227

6. தொழுதல் என்ற தமிழ்ச்சொல்

   முனைவர்.சு.சௌந்தரபாண்டியன் 239

தமிழ்ப் பொழில் கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ. 5.00	ரூ. 10.00
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60.00	ரூ. 120.00
வாழ்நாள் கட்டணம்	ரூ. 500.00	ரூ. 1000.00

வேண்டுகோள்

தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப்பெறுகின்றன. கட்டுரைகள் ஆறு பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருக. இருவரி இடைவெளியிட்டு, தட்டச்சிட்டு இருபடிகள் அனுப்புக. வெளியிடப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா.

அறிவு

(ஆசிரியர் பக்கம்)

உயிரினங்களுக்குரிய குணங்களுள் அச்சம் என்பது ஒன்று மற்றும் எண்வகை மெய்ப்பாடுகளுள் இதுவும் ஒன்றாக உள்ளது. இவ் அச்சம் அஃறிணை உயிர்களுக்கு உணர்வு அடிப்படையிலும் மக்களினத்திற்கு உணர்வோடு அறிவடிப்படையிலும் அமைந்துள்ளது. உணர்வு அடிப்படையில் தோன்றும் அச்சத்தை அறிவடிப்படையில் ஆராய்ந்து தள்ள வேண்டுமிடத்துத்தள்ளுவதும் கொள்ள வேண்டுமிடத்தும் கொள்வதும் எதிரதாக் காக்கும் அறிவுடையார் செயற்பாடு என வள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

நாடாளும் அரசனுக்கு வேண்டும் குணங்களைக் கூறமுற்பட்ட வள்ளுவர் முதலாவதாகக் கூறுவது அஞ்சாமை இதனை எந்நிலையிலும் நெகிழவிடக் கூடாது என்பார். “அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கியல்பு” என்று கூறியவர் அது கீழ்களுக்குரியதென்பார் அச்சமே கீழ்களது ஆசாரம் என்றும் கூறுகின்றார். அச்சம் ஆளுமைக்குப்பகை என்பது சான்றோர் கருத்தாகும். அச்சம் என்னும் சொல்லை வள்ளுவர் தம்நூலுள் ஏறத்தாழ 45 இடங்களிற் கையாளுகின்றார்.

அச்சம் தோன்றுவதற்குக் காரணம் செல்வம், மனைவி, மக்கள், உடம்பு, உயிர் முதலியவற்றிற்கு இடையூறும் கேடும் நேரும் சூழ்நிலைகளும் பதவி, புகழ், மானம், குறிக்கோள் முதலியவற்றிற்கு இழப்பு நேரும் சூழ்நிலைகளுமாகும். இவற்றுள் அஞ்சுதற்கு உரியவை எவை அஞ்சாமைக்குரியவை எவை எனத் தேர்ந்து அச்சத்தையும் அஞ்சாமையையும் மேற்கொள்வதே நன்றின் பாலுய்க்கும் அறிவுடையார் தொழிலாகும். அஞ்சத்தக்கன, தகாதனவற்றைத் தேர்தற்கு உலகியலறிவும் கல்வியறிவும் துய்ப்பறிவும் மட்டுமே சாலா. அவை ஓரளவு துணை புரியுமேனும் மெய்யுணர்வே கலங்காத முடிவினைத் தரவல்லது.

அச்சத்திற்குக் காரணமான பொருள்களுள் எவை நிலை பேறுடைய பொருள் எவை நிலையில்லாத பொருள் எனத் தெரிந்து அஞ்சுதலையும் அஞ்சாமையையும் மேற்கொள்ளல் வேண்டும். அழிந்தாலும் பின்னர் ஈட்டிக் கொள்ளத்தக்கவை எவை. ஈட்ட முடியாதவை எவை என்றும் தேர்தல் வேண்டும். உதாரணமாக இழந்தால் பெற இயலாதவற்றுள் உயிர் ஒன்று.

எனினும் படைமறவனுக்கு அது பெரிதன்று. உறின் உயிர் அஞ்சாமறவர் இறைவன் செறினும் சீர் குன்றலிர் (778) படைமறவன் அஞ்சத்தக்கது புறங்கொடுத்தலை. இடுக்கண் வருங்கால் நகுக, அஞ்சற்க என்பார் "உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்" கொடுங்கோன்மைக்கு அஞ்சுதல் வேண்டுமென்பார். சான்றோர் மானம் வரின் உயிர் நீர்ப்பர் என்பர்.

இங்ஙனம் மக்கள் ஏற்றிருக்கும் கடமைகட்கும் பொதுவாய் அறநெறிக்கும் ஏற்ப அஞ்சத்தக்க பொருள்கள் வேறுபடும் இளையோர் முதியோர் நிலைகட்கும் ஆடவர், பெண்டிர் என்னும் நிலைகட்கும் ஏற்ப அஞ்சத்தக்க பொருள்கள் வேறுபடும். தோற்பதற்கு அஞ்சுதல் வேண்டும் என்பது பொது விதி. எனினும் சால்பிற்குக் கட்டளையாதெனின் தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல் என்பார். தோல்வி என்பது அவரவர் கொண்ட குறிக்கோளைப் பொருத்தமையும்.

எக்காலத்தும் எல்லா நிலையினும் யாவரானும் அஞ்சத்தக்கவை எனக் காணுமிடத்து அறஞ்சாரா நல்குரவு, தன் உடலோம்பலைக் கருதிய இரத்தல், தன்மானத்திற்கு ஊறு நேரும் நிலை. குறிக்கோள் அழிவு. நாணழிவு, கற்பினுக்கு ஊறு. நல்லொழுக்கத்திற்கு இடையூறு முதலியவையாம்.

அஞ்சுவதற்குரிய ஒன்றனை அஞ்சாமையைப் பேதைமை என்கிறார் வள்ளுவர். பேதைமைக்கு இலக்கணங் கூறுமிடத்து "பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு ஊதியம் போகவிடல்" என்கிறார். அதனான் இயற்கை தந்த குணங்களுள் யாதொன்றும் நீக்கத்தக்கதன்று. அதனை மேற்கொள்ளும் முறையிலேயே மக்களின்வாழ்வும், அழிவும் நலமும் தீங்கும் நிகழும் என்பதனை வலியுறுத்துவாராய் பொய்யாமொழியார்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் (430) என்கின்றார்

ச.பா

கிறித்தவ இலக்கியங்களில் சமயப் பொதுமை

– முனைவர்.இர.ஆரோக்கியசாமி,
தமிழ்த்துறை,
அ.வீ.வா.நி.திரு புட்பம் கல்லூரி,
பூண்டி.

தமிழகம் சமய ஒற்றுமையும் பண்பாட்டுக் கலப்பும் கொண்டது. பல சமய மக்களும் தமிழகத்தில் அருகருகே வாழ்ந்து வருகின்றனர். சமய வழிபாட்டிடங்களும் அவ்வாறே அமைந்துள்ளன. தமிழக மக்கள் தொகையில் இந்து சமயத்தவர் பெரும்பான்மையோராய் உள்ளனர். அனைவரும் தோழமை உணர்வோடு வாழ்வதால் இவர்தம் பண்பாட்டுக் கூறுகளும், பழக்க வழக்கங்கள் சிலவும் பிற சமயத்தவரிடம் பரவி நிலைத்த இடத்தைப் பெற்று விளங்குவது இயல்பே. பிற சமயம் சார்ந்தவர்கள் தாங்கள் பின்பற்றும் சமயத்தால் வேறுபட்டாலும் பிறப்பால் தமிழ் மண்ணின் மைந்தர்களாக உள்ளனர். எனவே, இந்து சமயம் சார்ந்த இலக்கியங்களின் செல்வாக்குக் கிறித்தவப் புலவர்களின் படைப்புக்களிலும் இடம் பெறுகின்றன.

மாயோன் தாயும் மரியன்னையும்

கிறித்தவச் சமயப் புலவர்கள் தாங்கள் படைத்துள்ள சிற்றிலக்கியங்களில் இந்து சமயத் தெய்வங்களின் பண்புகளைக் கிறித்தவச் சமயத் தெய்வங்களிடமும் காணமுற்பட்டு அதன்வழி ஒருமைப்பாட்டை உருவாக்க முனைந்துள்ளனர். இந்து சமயம் சார்ந்த கிறித்தவச் சிற்றிலக்கியப் படைப்பாளர்களும் தமிழ் மண்ணுக்குரிய மாண்பைக் கிறித்தவச் சமயக் கடவுளர்களிடம் காண முற்பட்டுள்ளனர். இயேசு நாதரின் தாயான மரியன்னை,

"மாயோன் தாய்"1

என்று போற்றப்படுகிறாள். "மாயோன் மேய காடுறை உலகம்" என்பது தொல்காப்பியம் (நூ.951) கண்ணன், இராமன் முதலிய அவதாரங்கள் மாயோனின் – திருமாலின் வடிவங்களே.

"மலர்மிசைத் திருவினை வலத்தினி லமைத்தவன்
மறிதிரைக் கடலினை மதித்திட அடைத்தவன்
இலகொளித் தடவரை கரத்தினில் எடுத்தவன்
இனநிரைத் தொகைகழை இசைத்தலில் அழைத்தவன்
முலையுணத் தருமவள் நலத்தினை முடித்தவன்
முடிகள்பத் துடையவன் உரத்தினை அறுத்தவன்

உலகனைத் தையுமொரு பதத்தினில் ஒடுக்கினன்
ஒளிமலர் கழல்தரு வதற்கினி யழைத்துமே"
(சிலப்பதிகாரம் உரை.ப.189)

என்னும் பாடலால் இவ்வுண்மை விளங்கும்.

தமிழகத் தெய்வமான மாயோனின் தாய் தேவகியாவாள். இயேசு நாதரை மாயோனாகக் கொண்டு தம்புரான் தோழப்பிள்ளை, கன்னிமரி பிள்ளைத் தமிழில் மரியன்னையை "மாயோன் தாய்" என அழைக்கிறார்.

தேவகி தன் மகன் கண்ணனைக் கம்சனிடமிருந்து காப்பாற்றினாள். கண்ணாகிய குழந்தையை அடையாளம் காணவியலாத நிலையில் பல ஆண் குழந்தைகளைக் கம்சன் வெட்டிக் கொன்றான். இதுபோன்றே இயேசுநாதராகிய குழந்தை பிறந்தபொழுது அக்குழந்தையால் தனக்குத் தீங்கு நேரிடும் என்பதாலும் குழந்தையைக் கண்டு வணங்க வந்த ஞானிகள் தன்னை ஏமாற்றியதாலும் சினம் கொண்ட ஏரோது மன்னன், "பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் இரண்டு வயதும் அதற்கு உட்பட்டதுமான ஆண் குழந்தைகளையெல்லாம் கொன்றான்" (மத்தேயு : 2 : 16) இறைத் தூதரால் எச்சரிக்கப்பட்டு இயேசு குழந்தையை மரியன்னை காப்பாற்றினாள். இவ்வொற்றுமையை உளத்திற்கொண்ட ஆசிரியர் மரியன்னையை "மாயோன் தாய்" என அழைக்கிறார்.

தேவகியும் மரியன்னையும்

கண்ணன் இறையவதாரமாக மனித உருக்கொண்டு மக்களை நல்வழிப்படுத்த மண்ணுலகம் வந்தான். அவ்வாறு வரும்போது ஒரு தாய் வயிற்றில் கருவாக உருக்கொண்டு தோன்றினான். மாசற்ற இறைவன் தாம் தோன்றுவதற்குக் கருவியாகத் தேர்ந்துகொள்ளும் தாயையும் மாசற்றவளாகவே படைப்பான். நற்பண்புகள் அனைத்தும் நிரம்பப் பெற்ற ஒரு நற்றாயின் திருவயிற்றில்தான் இறைவன் உருவாக முடியும் எண்ணற்ற பெண்கள் இவ்வுலகில் பிறந்தாலும் அவர்களுள் ஒரு சிலரையே இறையவதாரங்கள் தாயாகத் தேர்ந்து கொள்ளுகின்றன. இத்தகைய பேறு பெற்றவர்களுள் கண்ணனைத் தன் மணிவயிற்றில் தாங்கிய தேவகியும் ஒருத்தியாவாள். இதுபோன்று இயேசுநாதரைத் தம் திருவயிற்றில் தாங்கிய மரியன்னையும் பெண்களுள் ஆசி பெற்றவள். எனவே மரியன்னை,

"தூய்மை கொண்ட தேவகி"2

என்று போற்றப்படுகிறாள் எனலாம்.

சிவபெருமானும் இயேசுநாதரும்

சேக்கிழார் தாம் பாடியருளிய பெரியபுராணத்தில் சிவபெருமானை "அலகில் சோதியன்" (பாயிரம்.1) என்று பாடிப் பெருமிதம் கொள்கிறார். மாணிக்கவாசகர், திருவாசகத்தில் "விரி சுடராய் நின்ற மெய்யன்" (குயில், பத்து, ப.206) என்று போற்றுகிறார்.

இறைவன் ஒளிவடிவாகத் திகழ்கிறான் என்பது பெரும்பாலான சமயங்களின் பொதுவான நம்பிக்கை. இயேசுநாதர், "நானே உலகின் ஒளி" (அருளப்பர் 8 : 1 2) என்று கூறுவதை அறிய முடிகிறது. இப்பொதுமைப் பண்பை உளங்கொண்டும், தமிழிலக்கிய நினைவு கொண்டும் இ.குற்றாலம் ஏசுநாதர் பிள்ளைத் தமிழில்

"அலகில் சோதி ஏசு"3

என்று கூறுகிறார்.

நஞ்சுண்ட வாய்

சிவபெருமான் பாற்கடலில் எழுந்த நஞ்சை உண்டு தேவர்களைக் காத்தார் என்பது புராணச் செய்தியாகும்.

"பொங்குமா கருங்கடல் நஞ்சுண்டான்" (தேவாரம்.ப.338) என்று திருநாவுக்கரசரும்,

"அலைநீர் விடமுண்ட சித்தன்" (திருவாசகம் ப.223) என்று மாணிக்கவாசகரும்

"நஞ்சமார்ந்து என்நெஞ்சம் ஆர்ந்து"

என்று குமரகுருபரரும் (கு.கு.சு.பி.தி.ப.167) இந்நிகழ்ச்சியைப் போற்றுகின்றனர். இதுபோன்ற இயேசுநாதரும் நடுத்தீர்வை உலாவில்,

"நஞ்சுண்ட வாய்"4

எனக் கூறப்படுகிறார்.

யூத வீரர்களின் கொடுமையால் இயேசுநாதரின் உடலில் காயங்கள் பல உண்டாயின. அதனின்றும் குருதி வடிந்துகொண்டிருந்தது. அவர் சிலுவையில் அறையப்பட்டதால் மேலும் இரத்தம் வடிந்தது. இந்நிலையில் அவருக்குத்தாகம் உண்டாயிற்று. அதனால் "தாகமாயிருக்கிறது" என்றார். கீழே நின்ற வீரர்களில் ஒருவன், “”கடற்காளானைக் காடியில் தோய்த்து ஒரு கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தான் (மாற்கு 15 : 36)

இயேசுநாதர் நஞ்சுதோய்ந்த கடற்காளானைச் சுவைத்துப் பின் உயிர் நீத்தார். அதனால் இயேசுநாதரின் திருவாய் "நஞ்சுண்ட வாய்" எனப் போற்றப்படுகிறது. சிவபெருமான் உண்ட நஞ்சும், இயேசுநாதர் சுவைத்த காடியும் கடலிலிருந்து எடுக்கப்பட்டவை. சிவபெருமான் நஞ்சை உண்டு தேவர்களைக் காத்தார். இயேசு நாதர் நஞ்சுதோய்ந்த கடற்காளானைச் சுவைத்து உலக மக்களைப் பாவ இருளிலிருந்து மீட்டார். இதனால் இயேசுநாதரின் வாய் நஞ்சுண்ட வாய் எனக் கூறப்பட்டது பொருத்தமுடையதாக உள்ளது.

பெருவுடையார்

பிற்காலச் சோழ மன்னர்களின் பெருமைக்கும் புகழுக்கும் தலைவாயிலாக நிற்பவன் இராசராச சோழனாவான். இவனுடைய இறையன்பு, சமய ஈடுபாடு, கலையார்வம், இமயமாக நிமிர்ந்து நிற்கும் உள்ளப்பாங்கு, அறிவின் ஆழம் ஆகியவற்றைப் பறைசாற்றிப் பெருமிதத்துடன் நிமிர்ந்து தஞ்சைப் பெருங்கோயில் என்னும் இராசராசேச்சுவரம் ஆகும். இக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவன் "பெருவுடையார்"5 என அழைக்கப்படுகிறார்.

உலகச் செல்வங்கள் அனைத்திற்கும் உரிமையுடைய ஒப்பற்ற ஒருவன் என்பதைப் பெருவுடையார் என்னும் சொல் உணர்த்துகிறது. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு இயேசுநாதரை,

"............. கல்மனத்தைப்
பிளக்கும்தீ நாவுடைப் பேயைப் பிளக்கும் பெருவுடையார்"6

என்று மு.பவுல் இராமகிருட்டிணன் பாடுகிறார். சமயங்கள் இறைவனுக்கு இட்டு வழங்கும் பெயரில் வேறுபாடு நிலவினாலும் இறைவனின் பொதுமைப் பண்பைக் கூறுவதில் சமயங்களுக்குள் ஒருமைப்பாடு நிலவுவதை இதன்மூலம் உணர முடிகிறது.

சங்கரன்

சிவபெருமான் சங்கரன் எனப்படுகிறான். சங்கரன் என்னும் சொல்லுக்கு நன்மை செய்பவன் என்பது பொருள். சங்கரன் தீமைகளைச் சங்காரம் செய்கிறான். முருகக் கடவுள் அசுரர்களின் தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, காலப்படை ஆகிய நான்கையும் அழித்தான். இச்செயல்,

"தானவர்கள் நாற்படையும் சங்கரித்து" (கு.கு.சு.பி.தி.ப.15) என்று குமரகுருபரால் கூறுப்படுகிறது. தீமையை அழித்தல் இறைவனின் பொதுமைப் பண்பு. இயேசுநாதர் பாவமாகிய தீமையை அழிக்க மண்ணகம் வந்தார். அதனால் அவர்,

"பவத்தினுக்கே ஒரு சங்காரன்"7

என்று கூறப்படுகிறார்.

வெற்பு உகந்தார்

இந்து சமயக் கடவுளர் மலைகளைத் தம் இருப்பிடமாகக் கொண்டவர்கள் என்பதனை அச்சமய நூல்களால் அறியலாம்.

"குடையுடை அரக்கன் சென்று குளிர்கயிலாய வெற்பின்
இடைமட வரலை அஞ்ச எடுத்தலும் இறைவன் நோக்கி
விடையுடை விகிர்தன் தானும் விரலினால் ஊன்றி"

(திருநாவுக்கரசர்.தேவாரம்.பக்.106 – 107)

என்னும் பகுதியில் இராவணன் கயிலாய மலையைப் பெயர்க்க மேற்கொண்ட முயற்சியும் அதனை அறிந்து சிவபெருமான் தன் விரலால் மலையை ஊன்றி அவனது வலிமையைக் கெடுத்ததும் கூறப்படுகின்றன. சிவபெருமான் கயிலாய வெற்பில் வீற்றிருக்கிறார் என்னும் கருத்து இப்பாடல் வாயிலாக அறியப்படுகிறது.

இதுபோன்றே இயேசுநாதரும் தன் உலக வாழ்வில் பலமுறை மலைப் பகுதிகளுக்குச் சென்று தன்னைப் பின்தொடர்ந்த மக்களுக்குப் போதித்தார். தன் சீடர்களில் சிலரை உயர்ந்த மலைக்கு அழைத்துச் சென்று அவர்கள் முன் உருமாறினார். (மாற்கு 9 : 2) இறுதியில் கல்வாரி மலையில் தன் உயிரை நீத்தார். இச்செயல்களால் இயேசுநாதரும்,

"இணையாத் தனிவளம் சேர்நச ரேசர் இலங்குமரண்
மனையாக வெற்புகந் தார்"8

எனப் பாடப்படுகிறார்.

நாவரசர்

நாவீறுமிக்காரை நாவரசர் என்று உலகினர் போற்றுவர். தாம் கூறும் சொல்லை வெல்லும் சொல் இன்மையறிந்து சொல்ல வல்லார்பின் உலகம் செல்லும். சொல் வளமிக்க நற்றமிழ்ப் பதிகங்கள் பல பாடியதால் மருள் நீக்கியார் பின்னர்த் திருநாவுக்கரசரானார்.

இயேசுநாதர் அஞ்சாமல் உண்மையைப் போதித்தார். தலைமைக் குருவும், பரிசேயர்களும் இயேசுநாதரைப் பிடித்து வரும்படிக் காவலர்களை அனுப்பினர். காவலர்கள் சென்று வெறுமையாய்த் திரும்பினர். அது கண்ட அதிகார வர்க்கத்தினர் "அவனை ஏன் பிடித்துக்கொண்டு வரவில்லை" என்று கேட்டனர். அதற்குக் காவலர்கள், "எவரும் அவரைப்போல் என்றுமே பேசினதில்லை" என்றனர். (அருளப்பர் 8 : 45 – 46) இச்சான்றுமூலம்

இயேசுநாதரின் நாவாற்றல் புலப்படுகிறது. இவ்வடிப்படையில் சூ.தாமஸ்

"நாவினுக்கரச" 9

என்று இயேசுநாதரை அழைக்கின்றார்.

ஒப்பிலியப்பன்

உவமை சொல்ல முடியாத – ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இறைவன் "ஒப்பிலியப்பன்" என்று இந்து சமயத்தில் அழைக்கப்படுகிறான். இதுபோன்றே மு.பவுல் இராமகிருட்டிணனும் இயேசுநாதரை,

"ஒப்பிலியப்பன்" 10

என்றழைக்கின்றார்.

இவைவழி இறைவன் பொதுமைப் பண்புகள் வெளிப்படுவதோடு வேறுபட்ட சமயக் கடவுளர்களிடையே ஒருமைப்பாடு காணவிழையும் இப்புலவர்தம் உள்ளப்பாங்கினையும் உணர முடிகிறது. கிறித்தவத் தெய்வங்களையும் அவற்றின் பண்புகளையும் தமிழ் மண்ணுக்குரியனவாக ஆக்கும் கிறித்தவச் சமயப் புலவர்களின் புலமைத் திறனும், விரிந்த மனப்போக்கும் குறிப்பிடத் தக்கன.

அடிக்குறிப்புகள்

1. எஸ். தம்புரான் தோழப்பிள்ளை, கன்னிமரி பிள்ளைத் தமிழ், பக்கம் 35.
2. எஸ். தம்புரான் தோழப்பிள்ளை, கன்னிமரி பிள்ளைத் தமிழ், பக்கம் 10.
3. இ.குற்றாலம், ஏசுநாதர் பிள்ளைத் தமிழ், பக்கம் 59.
4. . . . . நடுத்தீர்வை உலா, பக்கம் 15.
5. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், பக்கம் 333.
6. மு.பவுல் இராமகிருட்டிணன், விண்ணக வேந்தர் மும்மணிக் கோவை திருவடி மாலை, பக்கம் 62.
7. மு.நல்லசுவாமி பண்டிதர், 'அருள்திரை அந்தாதி' சிலுவைத்தியான மாலை, பக்கம் 8.
8. சூ.தாமஸ். 'நசரை நான்மணிமாலை' திருவருட்பா மாலை பக்கம். 136.
9. சூ.தாமஸ். 'நசரை நான்மணிமாலை' திருவருட்பா மாலை பக்கம். 136.
10. மு.பவுல் இராமகிருட்ணன், 'இயேசு திருவிரட்டை மணிமாலை' திருவடிமாலை, பக்கம் 52.

பாவேந்தரின் தாலாட்டுப் பாடல்கள்

முனைவர்.தா.ஈசுவரப்பிள்ளை,
இணைப்பேராசிரியர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

நாட்டுப்புறப்பாடல்கள் அவை வழங்கும் பகுதியின் சமுதாய, பொருளாதார, அரசியல், சமயநிலைகளையும், பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் பறைசாற்றுவனவாய்த் திகழ்கின்றன. ஒரு சமுதாயத்தின் வரலாற்றை ஆராயப் புகுவோர்க்கு நாட்டுப்புறப்பாடல்களும் துணை ஆதாரங்களாக அமைகின்றன. நாட்டுப்புறப்பாடல்களைப் பல நிலைகளில் பகுத்துக் காண்பர். அவற்றுள் மழலை, இளமை, முதுமை என்ற பகுப்பும் அடங்கும் (சா.வளவன், 1985, ப. 9).

மழலைப்பாடல்கள் குழந்தைகளுக்குப் புரியும்படியாகக் குழந்தைப் பாடல்களாய்ப் பாடுவது அல்லது இப்பாடல்களைவிடச் சிறிய தரம் உயர்ந்த பாடல்களாய்ப் பெற்றோர்கள் அல்லது மற்றோர் பாடுவது என்றும், குழந்தைகள் இயல்பாயிருக்கும்போதும் அல்லது விளையாடும்போதும் குழந்தைகளே பாடுவது என்றும், குழந்தைகளுக்காகத் தாய் தாலாட்டு இசைப்பது என்றும் மூன்று நிலைகளில் பாகுபடுத்திக் காட்டப்பெறுகின்றன. (ஆறு.அழகப்பன், 1980, ப.12). எனவே, நாட்டுப்புற மழலைப் பாடல்களின் ஒரு பகுதியாகத் தாலாட்டுப் பாடல்கள் திகழ்கின்றன எனலாம்.

தால்+ஆஅட்டு – தாலாட்டு. தால் என்பதற்கு நாக்கு என்பது பொருள். நாக்கை ஆட்டிப்பாடும் பாட்டு தாலாட்டு என்று விளக்கம் அளிக்கப்பெறுகிறது.

வாய்மொழி இலக்கியங்களில் அதிக அழிவில்லாமல் நல்ல உருவோடு கிடைப்பனவாய்த் தாலாட்டுப்பாடல்கள் திகழ்கின்றன என்பர். சந்ததி ஒரு தொடர்கதை. அதனால் தாலாட்டு அதில் தொடர்ந்துவரும் வளர்பாட்டு ஆகிறது. (ஆறு.அழகப்பன், 1980, ப.17).

தாய் – சேய் உறவு என்று தொடங்கியதோ அன்றே தாலாட்டும் தொடங்கிவிட்டது. இதனால் தாலாட்டுப் பாடலின் தொன்மை புலனாகின்றது.

தாலாட்டுப் பாடல்களின் வகைமைகளுள் தாய்மார்கள் தாங்கள் பரம்பரையாகவும் பிறரிடமிருந்து அறிந்தும் பாடிவரும் பாடல்கள், இவ்வகைப் பாடல்களால் வளர்ந்த நம் தமிழ்ப்புலவர்கள் அவற்றில் ஈடுபாடு கொண்டு இயற்றிய பாடல்கள் என்ற வகைப்பாடும் அடங்கும் (ஆறு.அழகப்பன், 1980, ப.15).

பல்வேறு இலக்கிய வகைகள் உருவாக்கம் பெறுவதற்குரிய வகையில் அவற்றின் கருக்கள் இலக்கண, இலக்கியங்களில் இடம்பெறுமாற்றைக் காணமுடிகிறது. இவ்வகையில் தாலாட்டின் இலக்கணக்கரு தொல்காப்பியத்தில் காணக்கிடைப்பதாகக் கருதுவர். தொல்காப்பியர் பாடாண்திணையின் துறைகளைக் குறிப்பிடுமிடத்து, "கண்படை கண்ணிய கண்படை நிலை" என்பதையும் சுட்டுகின்றார். (புறத்திணை இயல், நூற்பா.87), மன்னன் அரசவையில் சான்றோர்களுடன் சூழ்ச்சியில் கலந்து கருத்தூன்றி நீண்ட நேரம் கழிக்கின்றான். அப்போது மன்னனின் உடல்நலம்மீது அக்கறை கொண்ட மருத்துவர், அமைச்சர் முதலியோர் அவன் கண்துயில் கோடலைக் கருதியது இத்துறை என நச்சினார்க்கினியர் விளக்கம் தருகின்றார். இவண் தூங்க வைக்க முயலுதல் என்ற கருத்து இடம்பெறுகின்றது. உறங்கப் புகுமுன்பு பாடுதலைக் கண்படை கண்ணிய கண்படை நிலை என்று தொல்காப்பியர் குறித்துள்ளார். பிற்காலத்தில் குழந்தைகளைத் தூங்க வைப்பதற்கு மட்டுமே அது வழங்குவதாயிற்று; தாலாட்டுப்பாட்டு என்பதாயிற்று என மு.வரதராசன் குறிப்பிடுமாற்றைக் காட்டுவர் (சா.வளவன், 1985, ப.11).

இலக்கியங்களிலும் தாலாட்டுப் பற்றிய குறிப்புகள் காணப்படுமாற்றைச் சில சான்றுகள் மூலம் காட்டலாம். சிந்தாமணியில் ஐவகைத்தாயர் பற்றிய குறிப்பு உள்ளது (நாமகளிலம்பகம், பாடல் 334). ஆட்டுவாள் – பாராட்டுபவள், ஊட்டுவாள் – உணவு ஊட்டுபவள், ஒலுறுத்துவாள் – தாலாட்டுபவள், நொடிபயிற்றுவாள் – வார்த்தை கற்பிப்பவள், கைத்தாய் – கையிலேந்தி வளர்ப்பவள் என ஐவகைத் தாயர் குறிப்பிடப்பெறுகின்றார். "குரவம் பூம்பாவை கொண்டு ஒலுறுத்தவாரும்" எனச் சூளாமணியும், குரவம்பாவை கொண்டு ஒலுறுத்து ஆடியும் எனப் பெருங்கதையும் ஒலுறுத்தல் – தாலாட்டுதல் பற்றிக் குறிப்பிடுகின்றன.

குறிப்புகளாக இடம்பெறல் என்ற நிலையிலிருந்து சற்று வளர்ச்சியடைந்த நிலையை நாலாயிரதிவ்விய பிரபந்தத்தில் காணலாம். பெரியாழ்வார் தம்மை யசோதையாகக் கொண்டும் கண்ணனைக் குழந்தையாகக் கொண்டும் தாலாட்டுகின்றார் (பெரியாழ்வார் திருமொழி. 1 : 3 : 1 – 9). குலசேகர ஆழ்வார் சக்கரவர்த்தித் திருமகனைக் குழந்தையாகக் கொண்டு தாலாட்டுகின்றார் (பெருமாள் திருமொழி, எட்டாம் திருமொழி,1–10). பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் தாலாட்டுவதற்கென்றே தனிப்பருவம் அமைக்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் வழங்கும் நாட்டுப்புறப்பாடல்கள் வாய்மொழி இலக்கியங்களாகத் திகழ்கின்றன. அவற்றின் சிறப்புகளை உணர்ந்த இலக்கிய வாணர்கள் அவற்றுக்கு ஏட்டிலக்கிய ஏற்றம் கொடுத்துச் சிறப்பித்துள்ளனர். இவ்வகையில் தாலாட்டுப் பாடல்களும் ஏட்டிலக்கிய ஏற்றம் பெற்றுள்ளன.

15–ம் நூற்றாண்டு முதல் தாலாட்டு சிற்றிலக்கியம் என்ற நிலையை எய்திவிட்டதாகக் கருதுவர் (சா.வளவன், 1985, ப.12). சீர்காழி சிற்றம்பல அடிகள், தத்துவராயர், திருவேங்கட நாதன், வெள்ளியம்பலவாணத் தம்பிரான், சிவப்பிரகாச சுவாமிகள், ஈசுவரமுனியாபிள்ளை, யாழ்ப்பாணம் வ.நா.கணேச பண்டிதர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, உ.வே.சா., கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, கண்ணதாசன், வாணிதாசன் முதலியோர் தாலாட்டுப் பாடல்களை இயற்றியுள்ளனர். இவ்வரிசையில் பாவேந்தர் பாரதிதாசனும் இடம்பெறுகின்றார்.

சமுதாய பொருளாதார, பால் அடிப்படையில் மக்களிடையே காணப்பெறும் ஏற்றத்தாழ்வுகளையும் சமய அடிப்படையிலும் மூடநம்பிக்கைகளின் அடிப்படையிலும் காணப்பெறும் இழிநிலைகளையும் சுரண்டல்களையும் மொழி, இனம், நாடு ஆகியவற்றின்மீது பற்றின்மையையும் கண்டு மனம் கொதிப்புற்ற பாவேந்தர் இத்தகைய இழிநிலைகளை அகற்றிச் சமுதாயம் முன்னேறவும் தனிமனிதர்களின் நலம் மேம்படவும் பல புரட்சிச் சிந்தனைகளைத் தம் படைப்புக்களின்வழி வெளிப்படுத்தியுள்ளார். தம் கொள்கைகளையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்தப் பாவேந்தர் பல உத்திகளைக் கையாண்டுள்ளார். அவற்றுள் விண்ணப்பம், பத்து,

பள்ளியெழுச்சி, காப்பு, விடுகலி, பிள்ளைப்பாட்டு, ஏற்றப்பாட்டு, அறுவடைப்பாட்டு முதலான இலக்கிய வகைகளைக் கையாண்டுள்ளமையும் அடங்கும்.

இன்றைய குழந்தைகளே வருங்காலச் சமுதாயத்தின் தூண்கள். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. இளம்பருவத்தில் கூறப்பெறும் கருத்துக்கள் பிஞ்சு உள்ளங்களில் பசுமரத்து ஆணிபோல் ஆழமாகப் பதிந்துவிடும். குழந்தைப்பருவத்தில் தாய் பாடும் தாலாட்டின் இசை உறக்கத்திற்குப் பயன்படுவது போலவே இயல் உள்ளத்திற்குப் பயன்படுகிறது என்பதை உள நூல் விளக்குகிறது (தமிழண்ணல், 1991, ப.30). எனவே, பாவேந்தர் தாலாட்டு என்ற இலக்கிய வகையைக் கையாண்டும் தம் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றார். பாவேந்தர் இளைஞர் இலக்கியம் என்ற நூலில் மூன்று தாலாட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். குடும்ப விளக்கில் தாய், தோழி, தாய்வழிப்பாட்டி, தந்தைவழிப்பாட்டி ஆகியோர் தாலாட்டுவதாகக் காட்டியுள்ளார். "பெண்ணுலகு" என்ற பகுதியுள் ஆண்குழந்தைத் தாலாட்டு, பெண்குழந்தை தாலாட்டு ஆகியவற்றையும் "தேசியம்" என்ற பகுதியுள் தேசியத் தாலாட்டுகளையும் பாடியுள்ளார்.

இனி, பாவேந்தர் தம் சமுதாயச் சிந்தனைகளைத் தம் தாலாட்டுப் பாடங்கள் மூலம் வெளிப்படுத்துமாற்றைக் காணலாம்.

சமுதாயத்தில் வாழும் உறுப்பினர்களை உயர்ந்தவர்கள் என்றும் தாழ்ந்தவர்கள் என்றும் பாகுபடுத்தும் நிலை உள்ளது. இதைச் சமுதாயத்தரப்பிரிவு அல்லது சமுதாய அடுக்கமைப்பு (Social Stratification) என்பர். சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறு நிலைகளின் வரிசைப்பாகுபாட்டைக் குறிப்பது சமுதாயப்பிரிவு என்றும் (James B.Mokee, 1974, ப.189). தனிமனிதர்களுடைய செல்வத்தின் அளவு, மதிப்பு, அதிகாரம் மற்றும் இவற்றுடன் தொடர்புடைய பிற காரணிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தும்போது சமுதாயத் தரப்பிரிவு தோற்றம் கொள்கின்றது என்றும் (Jon M.Shepard, 1981, ப.203), பொருளாதாரம், மதிப்பு, அதிகாரம் ஆகிய வேறுபாடுகளின் அடிப்படையில் அமைந்த வரிசைமுறைகளைக் குறிப்பது சமுதாயத்தரப்பிரிவு என்றும் (Reeee McGee, 1980, ப.158), தகுநிலை அடிப்படையில் பல பிரிவுகளாகப்

பிரிக்கப்பட்டு ஓர் ஒழுங்கான படிநிலை அல்லது வரிசையில் அமைந்துள்ள சமுதாய அமைப்புமுறை சமுதாயத் தரப்பிரிவு என்றும் (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி. ப.482) பல்வேறு விளக்கங்கள் சமுதாயத் தரப்பிரிவு என்பது குறித்து அளிக்கப்பெறுகின்றன. சமுதாயத் தரப்பிரிவுகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்ட சமூகவியலாளர்கள் சாதிமுறை, பொருளாதாரம், பால், வயது, சமயம், தோலின் நிறம், உடல்வலிமை, கல்விச்சாதனை, மதிப்பு, அதிகாரம் முதலியனவற்றைச் சமுதாயத்தரப்பிரிவு தோன்றுதற்குரிய காரணிகளாகக் குறிப்பிடுகின்றார்.

சமுதாயத்தரப்பிரிவுகளைத் தோன்றுவிப்பதில் சாதிமுறை (Caste system) என்ற சமுதாய நிறுவனம் இன்றியமையாத பங்காற்றுகின்றது. பிற சமுதாயங்களில் சாதிமுறையை ஒத்த அமைப்பு காணப்படுகின்றதெனினும், இந்தியாவில் சாதிமுறை தனித்த தன்மையுடையதாய்த் திகழ்கின்றது எனச் சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஒருவரின் பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் பாராட்டும் நிலை இந்தியச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியதாகத் திகழ்கின்றமையையும் சமூகவியலாளர்கள் சுட்டுகின்றனர். பிறப்பு, தொழில்கள், அகிம்சை நெறியின் செல்வாக்கு, தூய்மையின்மை, போலச்செய்தல் என்ற உளவியல்கொள்கை, பொருளாதாரம், சமயம் போன்ற பல்வேறு காரணிகளால் சாதிமுறை வளர்ச்சியடைகின்றது.

இச்சாதிமுறையின் காரணமாகச் சமுதாயத்தில் உயர்ந்த சாதியினர் என்றும் தாழ்த்தப்பெற்ற சாதியினர் என்றும் சமுதாயத் தரப்பிரிவுகள் நிலவுகின்றன. இத்தரப்பிரிவில் உயர்நிலையுள்ளவர்கள் உயர் சமுதாய மதிப்புடன் வாழ்கின்றனர். தாழ்த்தப்பெற்ற பிரிவினர் சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைகளில் இயலாமையுடையவர்களாக வாழ்கின்றனர். உயர்சாதியினரால் தாழ்த்தப்பெற்ற சாதியினராகக் கருதப்பெறுவோர் பல்வேறு இழிநிலைகளுக்குள்ளாக்கப் பெறுகின்றனர். இவர்கள் தீண்டத் தகாதவர்களாகக் கருதப்பெறும் சமுதாய இழிநிலை காணப்படுகிறது. அன்பொத்த இரு உள்ளங்கள் காதலித்து மணவாழ்க்கை நடத்தச் சாதியின் அகமணக்கொள்கை தடைவிதிக்கின்றது. ஒருவர் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்துவிட்டால் அவர் இறக்கும்வரை அதே சாதியினராக வாழவேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்படுவதுடன் அவர் குழந்தைகளும் மரபுரிமையாக அச்சாதியினராகவே கருதப்பெறுகின்றனர். சாதிமுறையால் சமுதாயச்

சமத்துவமின்மை மேலோங்குகிறது. இதனால் சமுதாய முன்னேற்றமும் தனிமனித மேம்பாடும் பாதிப்புக்குள்ளாகின்றன. இவற்றை உணர்ந்த பாவேந்தர் தாலாட்டுப் பாடல்களிலும் சாதிமுறைக்கு எதிரான சிந்தனைகளை வெளிப்படுத்தக் காணலாம்.

> "நீதி தெரியும் என்பார் நீள்கரத்தில் வாளேந்திச்
> சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில்
> கனவேற்ற வந்த களிறே"
> (பெண்ணுலகு : ஆண்குழந்தை தாலாட்டு, கண்ணிகள். 6 – 7)

> "வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
> தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி"
> (பெண்ணுலகு, பெண்குழந்தை தாலாட்டு, 9)

எனக் குறிப்பிடுகின்றரர். சாதிகளின் பெயரால் சமுதாய நல்லிணக்கத்தைச் சிதைத்து, சமுதாய உறுப்பினர்களைத் துண்டாடுபவர்களைத் தக்கைகள் எனச் சாடுகின்றார். இவ்வாறு சாதி வேறுபாடுகளைப் பாராட்டிச் சமுதாயத்தில் தசப்பிரிவுகளைத் தோற்றுவிப்பவர்களை எதிர்த்துப் போராடிச் சமத்துவச் சமுதாயம் காணவேண்டும் என வேண்டுகின்றார். சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையுள்ள சாதிமுறையை இருட்டு என்றும் அது வேண்டாத ஒன்று என்றும் குறிப்பிடுகிறார். சாதியாகிய இருட்டு சமுதாயத்திலிருந்து அகன்று சமத்துவச் சமுதாயம் மலர்வதற்குத் தோன்றிய தூண்டா விளக்காகப் பெண்குழந்தையைக் கருதித் தாலாட்டுகின்றார்.

சமுதாயத்தில் காணப்பெறும் மற்றொரு நிறுவனம் சமயம் ஆகும். சமயம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட சமூகவியலாளர்களிடையே சமயம் சமுதாய நலம் பயக்கும் செயல்கள் பலவற்றைக் கொண்டுள்ளது என்றும், சமயம் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் சக்தி என்றும் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் தம் மேலாண்மையை நிலைநிறுத்திக் கொள்வதற்காகச் சமயத்தின் பெயரால் சமுதாய ஊறுவிளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதைப் பாவேந்தர் கண்டார். கடவுளின் பெயரைக் கூறிக்கொண்டு பிறர் பொருளையும் உழைப்பாளர்களின் உழைப்பையும் சுரண்டுகின்ற நிலை சமுதாயத்தில் நிலவுகின்றது. இத்தகைய நிலைகட்கு மக்கள் இலக்காகாது இவை திட்டமிட்ட சதிச்செயல்கள் என உணர்ந்து செயல்படவேண்டும் என்பதை அறிவுறுத்த எண்ணிப் பாவேந்தர்,

"எல்லாம் அவன் செயலே என்று பிறர்பொருளை
வெல்லம் போல் அள்ளிவிழுங்கும் மனிதருக்கும்
காப்பார் கடவுள் உமைக் கட்டையில் போகுமட்டும்
வேர்ப்பீர் உழைப்பீர் என உரைக்கும் வீணருக்கும்
மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த
தேனின் பெருக்கே என் செந்தமிழே கண்ணுறங்கு"

(பெண்ணுலகு ஆண்குழந்தை தாலாட்டு, 14 – 16)

என்று வேண்டுகின்றார். வாழ்க்கையில் மக்கள் பல்வேறு துன்பங்களுக்குள்ளாகி அல்லலுறும் வேளையில் சமயத்தின் பெயரைக் கூறிக்கொண்டு ஒரு கூட்டம் மேலும் சமுதாயத் தீங்குகளை விளைவித்துக் கொண்டிருக்கிறது என்பதை,

"புண்ணிற் சரம் விடுக்கும் பொய்ம் மதத்தின் கூட்டத்தைக்
கண்ணிற் கனற் சிந்திக் கட்டழிக்க வந்தவளே"

(பெண்ணுலகு, பெண்குழந்தை தாலாட்டு, 10)

என்ற அடிகள் மூலம் காட்டுகின்றார்.

பொருளாதார அடிப்படையிலும் மக்களிடையே தரப்பிரிவுகள் நிலவுகின்றன. இத்தரப்பிரிவுகளில் உயர்நிலையிலுள்ளவர்கள் செல்வ வளம் மிக்க மேட்டுக்குடியினராக வாழ்கின்றனர். வறியவர்கள் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் இன்றி, துன்பம் மிக்க, இழிந்த வாழ்க்கை வாழ்கின்றனர். இத்தகைய கொடிய வறுமை நிலையை அகற்றிச் சமத்துவச் சமுதாயம் படைப்பதற்காக முயலாமல் சமயங்களைக் கூட்டியழுகின்றனர் என மனம் புண்பட்ட பாவேந்தர் இந்த நிலையை வேரோடு அழிக்க வேண்டும் என்பதை,

"அல்லும் வறுமை அகற்றாமல் அம்புவிக்குக்
கொள்ளை நோய் போல் வந்த மதத்தைக் கூட்டியழும் வைதிகத்தைப்
போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்
வேரோடு போக்க வந்த வீரா இளவீரா !"

(பெண்ணுலகு, ஆண்குழந்தை தாலாட்டு, 10 – 11)

எனக் காட்டுகின்றார். மதத்தைப் பொய்ம்மதம் என்கின்றார். கோயில்கள் என்ற பெயரால் சில தன்னலக்காரர்கள் இன்பமாக வாழ்கின்றனர். இதை

உணராத பாமரமக்கள் அவர்களை ஆதரிக்கின்றனர். இந்நிலையைத் தவிர்க்க வேண்டும் என்பதை,

"வாயில் இட்டுத் தொப்பை வளர்க்கும் சதிக்கிடங்கைக்
கோயிலென்று காசுதரும் கொள்கை தவிர்ப்பவளே"

(பெண்ணுலகு, பெண்குழந்தை தாலாட்டு, 13)

என்ற அடிகளில் சுட்டுகின்றார். இவர்கள் இவ்வாறு சுரண்டுவதற்கு அடிப்படைக் காரணம் மக்களிடம் காணப்பெறும் மூடநம்பிக்கைகளே ஆகும். எனவே சமயத்தின் பெயரால் நடைபெறும் சமுதாய, தனிமனிதத் தீங்கு விளைவிக்கும் செயல்களை அகற்ற மக்களிடையே காணப்பெறும் மூட நம்பிக்கைகள் அகற்றப்படவேண்டும் என்ற நோக்கில்,

"சாணிக்குப் பொட்டிட்டுச் சாமிபென்பார் செய்கைக்கு
நாணி உறங்கு நகைத்து நீ கண்ணுறங்கு"

(பெண்ணுலகு, பெண்குழந்தை தாலாட்டு, 14)

"மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப்பெட்டகமே"

(பெண்ணுலகு, பெண்குழந்தை தாலாடுடு, 8)

எனத் தாலாட்டுப் பாடுகின்றார். மூடநம்பிக்கையின் அடிப்படையில் மக்கள் தமக்கு இழைக்கும் கொடுமைகளைக் கண்டு கொதிப்புறாமல் தாம் சுரண்டப்படுவதை எதிர்க்காமல் எல்லாம் கடவுள் செயல் என்று துடைநடுங்குகின்றனர். இப்போக்கை அகற்றவேண்டும் என்கிறார். மக்களிலும் பெண்கள் எளிதாக இத்தகைய சூழ்ச்சிகளுக்கு இலக்காகிப் பல்வேறு துன்பங்களை அடைந்துவருகின்றனர். அவர்களை மூடநம்பிக்கையிலிருந்து விடுபடச் செய்யவேண்டும் என்பதை,

"தெய்வத்தை நம்பும் திருந்தாப் பெண்குலத்தை
உய்விக்க வந்த உவப்பே பகுத்தறிவே"

(பெண்ணுலகு, பெண்குழந்தை தாலாட்டு, 11)

எனக் காட்டுகின்றார்.

மக்களிடையே காணப்பெறும் மூடநம்பிக்கைகளைச் சுட்டிக்காட்டி அவர்களுக்குப் பகுத்தறிவு புகட்ட முற்படும்போது மக்களின் மூடநம்பிக்கைகளைப் பயன்படுத்தி ஏமாற்றி வாழ்வோர்களின் எதிர்ப்பைத் துச்சமென மதிக்கவேண்டும் என்பதை,

"வாடப் பலபுரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப்பழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும்
மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த
ஈடற்றதோளா இளந்தோளா கண்ணுறங்கு"
(பெண்ணுலகு, ஆண்குழந்தை தாலாட்டு, 12 – 13)

சமுதாயத்தில் தரப்பிரிவுகளைத் தோற்றுவிக்கும் காரணங்களில் பால் வேறுபாடும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பால் அடிப்படையில் ஆண்கள் உயர்வானவர்களாகவும் பெண்கள் தாழ்வானவர்களாகவும் கருதப்பெறும் நிலை உள்ளது. பெண்கள் பல்வேறு நிலைகளில் உரிமைகள் இழந்து ஆண்களின் அடிமைகள் போல் வாழ்கின்றனர். ஒரு சமுதாயம் மேம்படவேண்டுமானால் பெண்ணின மேன்மை இன்றியமையாது தேவை என உணர்த்த பாவேந்தர் பெண்களின் சிறப்பியல்புகளை,

"வண்மை, உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மணிகளால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே"
(பெண்ணுலகு, பெண்குழந்தை தாலாட்டு, 3)

எனப் போற்றுகின்றார். பெண்களை ஆணாதிக்கம் காரணமாகச் சில ஆடவர்கள் நாய்போல் மதித்து இழித்துரைக்கின்றனர். ஆனால் பெண்கள் இப்புவிக்குத் தாய் போன்றவர்கள் என உணர்த்தும் வகையில்,

"நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே"
(பெண்ணுலகு, பெண்குழந்தை தாலாட்டு, 4)

எனப் பாடுகின்றார்.

சமுதாயமும், சமுதாயத்தில் வாழ்கின்ற தனிமனிதர்களும் உயர்வடைய வேண்டுமானால் நாட்டுப் பற்றும் ஒற்றுமை உள்ளமும் தேவை. இதை வலியுறுத்த விரும்பிய பாவேந்தர் தேசியத் தாலாட்டில் பெண்குழந்தையின் சம்பந்தியாக வங்கத்து வீரரையும், அண்ணனாகத் துருக்கரையும் மைத்துனராகத் தெலுங்கரையும் சொந்தக்காரராகத் தமிழ்நாட்டுளாரையும் அக்கரையாக நாட்டுக்கு நூலிழைக்கும் நங்கையரையும், அம்மானாக வீட்டில் துணி நெய்வோரையும், இரத்தம் சேர்ந்த உடம்புடையோராகக்குமரி முதல் கங்கை இமயம் வரை உள்ளோரையும் கூறி

நிலம்/மனை விலை ஆவணங்கள்

நிலவிலை ஆவணங்கள் நான்கும் மனைவிலை ஆவணங்கள் ஐந்தும் இத்தொகுதியில் உள்ளன. விற்பவர் வாங்குபவரிடம் முன்பெற்ற கடனை அடைப்பதற்கோ அல்லது வேறு அவசரப் பயன்பாட்டுக்கோ நிலம்/மனை விற்பனை செய்துள்ளார். இப்படி விற்கப்பட்ட நிலம் அல்லது மனை பெரும்பாலும் அவ்வூரில் சில குறிப்பிட்ட குடும்பங்கள் கூட்டாக அனுபவிக்கும் முறையாகிய கெணசங்கா பாகப் பங்குகளில் ஒன்றைச் சேர்ந்ததாகச் சுட்டப்படுகிறது. இம்முறை பிராமண ஊர்களில் மட்டும் வழக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது. ஊர் நிலங்கள் ஒரு குறிப்பிட்ட எண் உள்ள பங்குகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பங்கிலும் நன்செய், புன்செய் மனை போன்ற பலதரப்பட்ட வகைகளும் அடங்கும். தொடக்கத்தில் ஒவ்வொரு நிலக்கிழாருக்கும் இத்தனை பங்குகள் என்று இருந்தன. சோழர் காலப் பிராமண ஊர்களில் (பிரமதேயங்களில்) ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வேலி கொண்ட பங்கு ஒன்று கொடுக்கப்பட்டதைப் பல்வேறு கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இவ்வோலை ஆவணங்களில் ஒருவரே பல பங்குகளுக்குரியவராக இருந்தமையைப் பார்க்கமுடிகிறது. (உ-ம்.)

> "1852 வருஷம் ஆகஸ்டு மாதம் 29 தேதிக்குத் தமிழ் பரிதாபி வருஷம் ஆவணி மாதம் 16 தேதி ஆங்கரையில் இருக்கும் கோதண்டராமய்யன் புத்திரன் எக்கராமய்யன் நெரிஞ்சல் குடியில் இருக்கும் அய்யாபிள்ளைக்கி நஞ்சை நிலம் சுத்தகிரய சாசனம் பண்ணிக் குடுத்தபடி யென்னவென்றால் இது நாளதுநாள் நம்முடைய அவசர நிமித்தமாக மாந்துறை கிராம கெணசங்கா பாகம் பங்கு 36-ல் எனக்குச் சொந்தமான பங்கு 18. . . . யிந்த பதினெட்டு பங்கை சேர்ந்த நஞ்சை நிலத்தில் உன் இடத்தில் நாளது தேதியில் சுத்தகிரய சாசனம் பண்ணிக் குடுத்தது அய்யாதுரையன் தஞ்சை அக்ரானூர் கொல்லை கட்டளைக்கு மேற்கு நெரிஞ்சல்குடி எல்லைக்கு வடக்கு மேற்பட கிராம பறயன் இறையிலிக்குக் கிழக்கு வடபுறம் அரட்டான்பள்ளம் கட்டளைக்குத் தெற்கு இனாங்கல்லைக்கு உள்பட்ட நஞ்சை அக்கிரானூர் கொல்லை கட்டளை செய் 1 க்கு காணி 1 குழி 50 யிந்த நிலத்தை சுக்தக்கிரய சாசனம் பண்ணிக் குடுத்து . . . . . . "4

4. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள், பக் 35, 36.

இவ்வாறு ஒருவரே பல பங்குகளுக்குரியவராக இருப்பதற்குக் காரணம் காலப்போக்கில் நிலவுடைமையில் ஏற்பட்ட மாற்றங்களாகும். 13ஆம் நூற்றாண்டு தொடங்கி சமுதாயத்தில் ஒருசிலர் பலவழிகளில் பெருநிலக்கிழார்களாக, நிலப்பிரபுக்களாக உருவானார்கள் என்பதற்கு இவை சான்று பகர்கின்றன.

ஓலையில் ஆவணப் பதிவுமுறை

ஒத்திப் போக்கியச் சீட்டுகளையும் விலை ஆவணங்களையும் 'ஆவணப் பதிவு' அடிப்படையில் இருவகையாகப் பிரிக்கலாம். ஒருவகை அரசு ஆவணப் பதிவகத்தில் பதியப்படாமல் தனிப்பட்ட இருவர் மட்டும் செய்துகொண்ட உடன்படிக்கைகள். இரண்டாவது ஆவணப் பதிவக்ததில் பதியப்பட்ட உடன்படிக்கைகள். பின்னவை அரசுக் கருவூல முத்திரை கொண்ட ஓலைகளில் எழுதப்பட்டுள்ளன. முன்பக்கத்தில் இடது கோடியில் வருவாய்த்துறை அஞ்சல்துலை (Revenue Stamp) முத்திரையாகப் பதிக்கப்பட்டுள்ளது. இஃது அந்த ஓலை ஆவணத்தின் மதிப்பு இவ்வளவு என காலணா, எட்டணா, ஒரு ரூபாய் என்று தமிழ், தெலுங்கு, பாரசீகம், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளில் குறிப்பிடப்படுகிறது. பின்பக்கத்தில் வலது கோடியில் கருவூல (பொக்கிஷம்) முத்திரை நான்கு மொழிகளில் பதிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு முத்திரை ஓலைகளில் ஆண்டில் பழையது 1832–ஐச் சேர்ந்த்து. அதாவது 19–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே அரசு ஓலைகள் மக்களிடத்தில் புழக்கத்துக்கு வந்துவிட்டன என அறியலாம். இருப்பினும் பல உடன்படிக்கைகள் ஆவணப்பதிவு அலுவலகங்களில் பதியப்படாமலும் நடைமுறையில் இருந்தன. மொத்தத்தில் முப்பது விழுக்காடே பதியப்பட்டன. நிலவிலை ஆவணங்களைப் பொறுத்தவரையில் யாவும் பதியப்பட்டன எனத் தெரிகிறது.

இசாறாப் பட்டயம்

இவ்வோலை ஆவணங்களில் நான்கு ஒலை ஆவணங்கள் கும்பினி அரசின் சார்பில் திருச்சிராப்பள்ளி சுபாவின் தண்டல் அதிகாரி (Collector) ஜான் பர்ட்டு துரை (J.Bird Collr) என்பவர் லால்குடி தாலுக்காவைச் சேர்ந்த நிலக்கிழாருக்குக் கொடுத்த 'இசாறா' பட்டயங்களாகும். இங்கு இசாறா

பொறுத்தவரையில் இலக்கணப் பிழைகள் மிகுதியாக நிறைந்துள்ளன. சில ஆவணங்கள் பேச்சு வழக்கை மிகவும் கொண்டுள்ளன. ஓரிரண்டு ஆங்கிலச் சொற்களும் பல பாரசீக, அரபுச்சொற்களும் ஆங்காங்குக் கையாளப்பட்டுள்ளன. 18, 19–ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் இருந்த கல்விநிலையையும் எழுத்தறிவையும் அளந்தறிய இவ்வாவணங்கள் உதவும்.

இவ்வோலை ஆவணங்களில் காணப்பெறும் ஆவண வகைகள் :

திருச்சி மாவட்ட ஓலை ஆவணங்களில் பல ஆவண வகைகள் காணப்படுகின்றன. அவைகள் முறையே மனை சுத்தக்கிரய சாசனம், நிலம்/பங்கு சுத்தக்கிரய சாசனம், நிலம்/பங்கு ஈட்டுப்பேரில் கடன்முறி/பத்திரம், நிலப் பிரியல் சீட்டு, நிலப் போக்கிய முறி/சீட்டு (அனுபோக ஒத்தி போக்கியக் கடன் முறி), உடன்படிக்கைச் சீட்டு, ஒத்தி கடன் படிக்கைச் சீட்டு, ஒத்தி உடன்படிக்கைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு, இசாறாப் பட்டயம், இசாறா முச்சலிக்கா இசாறா ரசீது, வாயிதாப் பணம் செலுத்தல் விவரம், குத்தகைச் (அடையோலை) சீட்டுக்கு எதிர் நடைச் சீட்டு, நிலப் பரிவர்த்தனைச் சாசனம், அடிமைச் சீட்டு ஆகியனவாகும்.

மேலே உள்ள பட்டியலை ஊன்றிப் பார்த்தால் ஆவணங்களானவை சாசனம், சீட்டு, பத்திரம், முறி என்று பல சொற்காளல் குறிக்கப்பட்டன என அறியலாம். இவை யாவும் ஒருபொருட் பல சொற்களென்பதில் அய்யமில்லை.

இவ்வோலை ஆவணங்களில் பெரும்பாலன, ஒருவர் தம் நிலத்தை வேறொருவரிடம் ஈடு வைத்து அவரிடம் கடன் வாங்கியதைப் பற்றியவை. இவற்றிலும் இரு வகைகள் உள்ளன. முதல்வகை 'ஈட்டுப் பேரில் கடன் முறி' என்பது. இதில் ஈடுவைத்தவர் கடன்முதலையும் வட்டியையும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் திருப்பித்தர வேண்டும். அப்பொழுதுதான் ஈடுவைத்த நிலத்தின் முழு உரிமையைத் திரும்பப் பெற முடியும். இதோடு தொடர்புடைய இன்னொருவகை 'ஒத்திப் போக்கிய கடன் முறி'அல்லது சுருக்கமாக 'போக்கிய முறி' என்பது. இதுவே சில சமயம் 'ஒத்தி உடன்படிக்கைச் சீட்டு' என்றும் வழங்கப்படும். இவ்வகையில் கடன்முதல்மீது வட்டி செலுத்தப்படுவதில்லை. வட்டிக்கு மாறாகக் கடன்கொடுத்தவர் நிலத்தை உழுது பயிர்செய்து அதன் விளைவை அனுபவிக்கலாம். கடன்தொகை குறிப்பிட்ட காலக்கெடுவில் திருப்பித்தரப்பட்டால் நிலத்தை அதன் உடைமையாளர் திரும்பப் பெறுவார்.

'ஈட்டுப் பேரில் கடன் முறி' எனும் ஆவண வகையில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கடன்தொகையைச் செலுத்தவில்லையென்றால் நிலத்தை

அனுபவிக்கும் உரிமையைக் கடன்கொடுத்தவர் பெறுவார். அதாவது இது போக்கிய முறியாகக் கருதப்படும். விளைநிலத்தைக் குத்தகைக்கு அடைத்தல் தொடர்பான ஆவணங்கள் ஒன்பது, இவ்வோலை ஆவணங்களில் உள்ளன. இவை யாவும் குத்தகைதாரர் நிலக்கிழாருக்கு எழுதிக்கொடுத்த 'எதிர்நடைச் சீட்டு' என்ற ஒப்பந்தங்களாகும். ஓர் ஆவணம் இதனையே இசாறா முச்சலிக்கா என்று குறிக்கிறது. அதாவது குத்தகைதாரர் தாம் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட நிலத்தை எந்த முறையில் பயிரிடுவது, நிலக்கிழாருக்கு எவ்வளவு தானியம் அல்லது எவ்வளவு தொகை எந்தெந்தக் கால எல்லைக்குள் செலுத்துவது, எவ்வளவு காலத்துக்குப் பின் நிலத்தைத் திருப்பிக்கொடுப்பது போன்ற நிபந்தனைகளைக் குறிப்பிட்டு அந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவோம் என்ற இசைவைத் தெரிவிக்கும் ஒப்பந்தச் சீட்டாகப் பின்வரும் ஓலை ஆவணச் செய்தி விளங்குகிறது.

> "..... உங்களுடைய சொந்தமான நஞ்செய் 19-ம் நாங்கள் கட்டு
> குத்தகைக்கு ஒப்பு கொண்ட படியினாலே மேற்படி நிலத்தில்
> இருபூ சாகுபடி செய்தும் ஒருபூ சாகுபடி செய்யப்பட்ட வயலே
> ஒருபூ சாகுபடி செய்தும் அதில் கண்ட பலனை அனுபவிச்சுக்
> கொண்டு தங்களுக்குக் குத்தகை அளக்குறது காரில் நெல்
> 300 கலம் ..... பாலமணியன் கோடை காரில் நெல் 190 கலம்
> ஆக 490 கலம் நெல்லும் களத்துமோட்டில் அளப்பேனாகவும்
> கொல்லன் தச்சம் சுவந்தரம் நானே குடுத்துக் கொள்ளு
> வேனாகவும் ..... சாகுபடிக்கு வாங்கப்பட்ட கோடை
> காரில் நெல் பத்துபடி கூடிய நெல்லும் குத்தகையுடன் சேர்த்து
> அளப்பேனாகவும் இந்தப்படிக்கு சம்மதிச்சு அடையோலை
> சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு எழுதிகுடுத்தேன் ......"[2]

இவ்வாறு குத்தகைக்கு நிலத்தைப் பெற்றுக் கொண்டவர் சாட்சிக்காரர்களையும் அழைத்து வந்து பத்திரத்தில் கையொப்பம் வாங்கிக் கொள்வதை,

> "..... சாட்சி லாலுகுடி தாலுக்கா அபிஷேகபுரம் சேஷய்யர்
> குமாரன் ஆனையன் அறிவேன். யிந்த கீறல் மருதாயி யிந்த
> கீரல் பஞ்சன் .... யிந்த கீரல் சன்னாசி. இந்தச் சீட்டு
> எழுதினது கணக்கு ராமய்யன்"[3]

என்னும் வரிகளால் அறியமுடிகிறது.

2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள், பக் 40.
3. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள், பக்40.

ஒற்றுமை எண்ணத்தை ஓங்கச் செய்கின்றார். (தேசியத் தாலாட்டு, பெண்குழந்தையைத் தாலாட்டுதல், 10 – 18).

இவ்வாறு தம் சாதிய எதிர்ப்புச் சிந்தனைகளை, மூடநம்பிக்கை ஒழிப்புச் சிந்தனைகளை, பெண்ணின மேன்மைச் சிந்தனைகளை, ஒற்றுமை உணர்வை ஊட்டும் சிந்தனைகளை வெளிப்படுத்தப் பாமர மக்கள் நன்கு அறிந்த தாலாட்டு என்ற நாட்டுப்புற இலக்கிய வகையை ஓர் புலப்பாட்டு உத்தியாகப் பாவேந்தர் கையாண்டுள்ளார் எனலாம்.

பயன்பட்ட நூல்கள்

அழகப்பன், ஆறு,	1980	தாலாட்டுப் பாடல்கள் – திறனாய்வு, கழக வெளியீடு, சென்னை.
தமிழண்ணல்,	1991	தாலாட்டு, செல்வி பதிப்பகம், காரைக்குடி.
வளவன், சா.,	1985	நாட்டுப்புறவியல் கட்டுரைகள், மைதிலி பதிப்பகம், சென்னை.
James B.Mckee,	1974	Sociology - The`study of Society, Holt, Tinehart and Winstow, Newyork.
Jon M.Shepered	1981	Sociology, West Publishing co., Newyork.
Ruce McGee	1980	Sociology - An Introduction, Holt, Rinehart, Winston, Newyork.

❋❋❋❋❋❋❋

திருச்சி மாவட்ட ஓலை ஆவணங்கள்

மொ.மருதமுத்து, எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்.,
ஆராய்ச்சி உதவியாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 600 113.

முகப்புரை

எண்கள், எழுத்துக்கள், குறியீடுகள் ஆகியவற்றை ஓலை, கல், காகிதம், செப்புத்தகடு போன்றவற்றில் செய்தியாகப் பொறித்து வைக்கப்பெறுவது ஆவணம் (Document) எனப்படும். ஒரு செய்தி அல்லது பல செய்திகளைப் பாதுகாக்கும் நோக்குடன் பதித்து வைத்துக்கொள்ளும் வழக்கம் மக்களிடையே நெடுங்காலமாக இருந்து வருகிறது. இப்பதிவுக் குறிப்புகள் அனைத்தும் பொதுவாகத் தமிழில் ஆவணங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன.

ஆவணம் என்பது மக்களின் அன்றாட வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளின் தொடர்பாக உள்ள பல்வேறு குறிப்பேடுகளாகும். அரசுகளுக்குள் ஏற்படும் உடன்படிக்கைகள், கடிதப் பரிமாற்றங்கள், முக்கியக் கொள்கை அறிவிப்புகள், தனிப்பட்டோக்ளுக்குள் நிகழும் கொள்வன கொடுப்பன தொடர்பான உடன்படிக்கைகள், உறுதிப் பத்திரங்கள், குழுத் தீர்மானங்கள், ஒழுங்கு விதிகள் போன்றவைகள் இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும். பழைய ஆவணங்கள் அக்கால மக்களின் பண்பாடுகள், சமுதாயப் பழக்க வழக்கங்கள், நாட்டு நடப்புகள் ஆகியவற்றை எடுத்தியம்பும் கருவூலமாகத் திகழ்கின்றன. எனவே அவை முந்தைய வரலாற்றினை அறிவதற்கும் எழுதுவதற்கும் துணைபுரிகின்றன. அவ்வகையில் திருச்சி மாவட்டம் லால்குடி வட்டத்தைச் சேர்ந்த நெரிஞ்சில்குடி ராமாராவ் என்பவரிடமிருந்து பெறப்பட்ட 64 ஓலை ஆவணங்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1991–இல் பதிப்பித்து நூலாக்கியுள்ளது.[1] இது ஓர் அரிய முயற்சியாகும். இந்நூலில் காணப்பெறும் ஓலை ஆவணச் செய்திகளைக்கொண்டு இக்கட்டுரை உருவாயிற்று.

எழுத்து, மொழிநடை அமைப்பு

இவ்வோலை ஆவணங்கள் பல நூற்றாண்டுகளாக இதற்கென்றே வளர்ந்து வந்த ஆவணமொழிநடையில் எழுதப்பட்டுள்ளன. இடைக்காலக் கல்வெட்டுகளோடு இவை பெரிதும் ஒத்துள்ளன. இருப்பினும் மொழியைப்

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள், (பதி.) எ.சுப்பராயலு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1991.

பட்டயம் என்பது 'பட்டா' எனப்படும். அதாவது இவை குறிப்பிட்ட நிலக்கிழாரின் அனுபோகத்தில் உள் நிலத்தின் அளவு, தரம், விளைச்சல் முதலியவற்றுக்கேற்றவாறு எவ்வளவு நிலவரி ஆண்டில் எந்தெந்தத் தவணைகளில், எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அரசுக்குச் செலுத்தவேண்டும் என்ற குறிப்புகளடங்கிய ஆவணங்கள். இவற்றில் தொனிக்கும் அதிகார மிரட்டல் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலேயே ஆங்கில அரசு இப்பகுதியில் எவ்வளவு உறுதியாக அமர்ந்துவிட்டது என்பதற்குச் சான்று பகர்கின்றன.

இவ்வோலை ஆவணங்களால் அறியவரும் பிறசெய்திகள்

இவ்வோலை ஆவணங்கள் யாவும் ஒரு மராட்டிப் பிராமணர் குடும்பத்தைச் சேர்ந்தவையாதலால் பெரும்பாலும் அப்பிராமணக் குடும்பத்துடன் தொடர்புடைய செய்திகளே அதிகமாக உள்ளன. இவற்றைக் கொண்டு அன்றையச் சமுதாயத்தை முழுமையாக விளக்கமுடியாவிட்டாலும் ஓரிரண்டு கூறுகள் தெளிவாகத் தெரிகின்றன. ஒன்று, சமுதாயத்தில் இருந்த வர்க்க முரண்பாடு. சில குடும்பங்கள் மிகுந்த நிலவளம் பெற்றிருக்க பல குடும்பங்கள் நிலமற்றவையாக இருந்தன. பெருநிலக்கிழார்கள் சுகபோகங்களில் திளைத்து, உழைக்காமல் செலவு செய்து வந்ததன் காரணமாக எப்பொழுதும் கடனாளிகளாக இருந்தார்கள். தங்கள் நிலங்களை அடகு வைத்தும், விற்றும் கடன் வாங்கிச் செலவு செய்தார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. சமுதாயத்தின் இன்னொரு கோடியில் இருந்தவர்கள் இவர்களை அண்டி வாழ்ந்து அடிமையாக இருந்தார்கள். அன்றைய நிலவுடைமைச் சமுதாயத்தின் தலையாய உற்பத்திச் சாதனங்களாக இவர்கள் இருந்தும் கூட தாங்கள் கடன் வாங்கவேண்டுமானால் தங்களையே அடகுவைத்தும் விற்றுமே கடன் வாங்க முடியும். மகன் திருமணத்துக்கென்று கடன் வாங்கிய தந்தை, மகனையும் மருமகனையும் வாழையடி வாழையாக நிலமுதலாளிக்கு அடிமையாக அர்ப்பணிப்பதை,

> "ஆனந்த வருஷம் வைகாசி மாதம் 9–ஆம் தேதி மாந்துறையில்
> இருக்கும் கொண்டையம்பேட்டை ராமச்சந்திரராயர்
> அவர்களுக்கு தாங்கள் பணை பள்ளன் ஆனந்தன்,
> கலியாணத்துக்காக அடிமை சீட்டு எழுதிக் கொடுத்தபடி

> யென்னவென்றால் இதுநாளது நான் என் மகன் கோவிந்தன் கலியாணத்துக்காக தாங்களிடமிருந்து ரூ.13-ம் நெல் 5 கலமும் வாங்கிக்கொண்டு கலியாணம் நடப்பிவிக்கிற படியினாலே மேற்படி கோவிந்தன் ஆண் அடிமை பெண் அடிமை குடும் சகிதமாய் பண்ணை அடிச்சுகொண்டு வருவானாகவும் இந்த படிக்கு சம்மதிச்சு . . . . அடிமைசீட்டு எழுதிக் கொடுத்தேன்"5

என்று ஓர் ஆவணம் ஒளிவு மறைவின்றித் தெரிவிக்கிறது. நிலக்கிழார்கள் தங்களிடம் அடிமையாக வேலை செய்யும் பணியாட்களையும் நிலங்களை விற்பதைப்போல தங்கள் வாழ்க்கை வளத்துக்காக விற்கும் செய்தியையும் ஓர் ஆவணம் நமக்குத் தெரிவிக்கிறது.

இவ்வாவணங்கள் வேறுசில சமுதாயச் செய்திகளையும் தருகின்றன. ஊர்களில் நிலக்கிழார்களை அண்டிக் கொல்லர், தச்சர், நாட்டுக் கர்ணன், கிராமக் கர்ணன் போன்ற பிற தொழிலாளிகளும் இருந்தார்கள். முகலாய ஆட்சிக் காலத்திலிருந்து வழங்கிவந்த சுபா, மாகாணம் போன்ற ஆட்சிப் பிரிவுகளையும் தொடர்ந்து கும்பினி அரசு பயன்படுத்தியது எனவும் அறியமுடிகிறது. கும்பினி ஆட்சியில் பயன்படுத்தப்பெற்ற பணவகையை 'கும்பினி அரும்பு', 'கும்பினி சிலாவணி' என்னும் பெயரால் அழைக்கப்பெற்றதையும், கிராமத்தில் வழங்கப்பெற்ற பழைய கணக்கு முறைகளையும் இவ்வாவணங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இவ்வோலை ஆவணங்கள் 19-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்து வந்த அரசியல் சமுதாய மாற்றங்களை ஓரளவு கோடிட்டுக் காட்டுகின்றன. இவ்வோலை ஆவணங்களில் இடம்பெறும் ஊர்களின் பெயர்களாக, அறந்தாங்கி, அக்கரானூர், அபிஷேகபுரம், ஆங்கரை, இடையாற்றுமங்கலம், இரகுநாதபுரம், உத்தமசீலி, கொண்டையம்பேட்டை, கும்பகோணம், கூத்தூர், கோனேரிராஜபுரம், சிறுமருதூர், சீரங்கம், செய்யாமங்கலம், செவந்திநாதபுரம், சொக்கநாதபுரம், தஞ்சாவூர், திரிசிரபுரம் கோட்டை, திருவானைக்காவல், திருவொருவநல்லூர், திருவாதி தாலுக்கா, திருக்காட்டுப்பள்ளி, திரும்மராய சமுத்திரம், நெரிஞ்சல்குடி, பம்பரஞ்சுத்தி, பழமாரனூர், மழவனூர், மாந்துறை, முளப்பதுகுடி, ரெங்கநாதபுரம், லாடபுரம், லால்குடி முதலான பல ஊர்களின் பெயர்கள் அறிய வருகின்றன. இது ஊர்ப்பெயர் ஆய்விற்கு வழிவகுக்கும்.

5. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள், பக் 51.

முடிவுரை

18, 19–ஆம் நூற்றாண்டுகளின் சமூக ஆய்விற்கும் வரலாற்றாய்விற்கும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரசு ஆவணங்களே இதுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆயினும் தமிழ் முதலிய இந்நாட்டு மொழிகளில் எழுதப்பெற்ற பிற ஆவணங்கள் தரும் செய்திகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டால்தான் முழுமையான வரலாறு கிடைக்கும் என்ற கருத்து அண்மைக் காலத்தில் மேலோங்கி வருகிறது. இத்தகைய ஆவணங்கள் ஏராளமாக நாட்டுப்புறங்களிலும், மவாட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், பல்வேறு தமிழ் ஆராய்ச்சி நிறுவனங்களிலும், சுவடி நூலகங்களிலும் அழிந்தவண்ணம் இருக்கின்றன. இவைபோன்ற ஆவணங்களைத் தொகுத்துப் பதிப்பித்தால் இதுவரை வரலாற்றிற்குக் கிடைக்காத பல செய்திகளைப் பெறலாம் என்பது உறுதி. திருச்சி மாவட்ட ஓலை ஆவணங்களில் உள்ள சமூக, வரலாற்றுக் கருவூலத்தைக் கோடிட்டுக் காட்டும் இவ்வாய்வு, இனிவரும் சமூக, வரலாற்று ஆய்வாளர்களுக்கு ஒரு வழித்துணையாக அமையுமேயானால், அதுவே இவ்வாய்வின் பயனாகும்.

குறிப்புதவி நூல்கள்

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள், எ.சுப்புராயலு (பதி.) தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 1991.

2. வாழ்வியற் களஞ்சியம் – தொகுதி 2, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 1991.

****

ஒப்பீட்டு நோக்கில் மனுநெறித் திருநூல்

திருமதி.சு.சந்திரா, எம்.ஏ., எம்ஃபில்.,
விரிவுரையாளர்,
ம.கா.ப. கல்லூரி, மதுரை – 2.

முன்னுரை

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தொடாத துறையில்லை; எண்ணற்ற இலக்கிய வகைகளுக்கு வித்திட்டார்; முந்தைய இக்கிய இலக்கண நூல்களில் ஈடுபட்டார். அல்வழி, அவர் படைத்த மனுநெறித் திருநூல் ஆய்வுப் பொருளாகிறது.

மனுநெறித் திருநூல்

மனுநெறித் திருநூல் என்னும் இப்படைப்பு, குறள் வெண்பாவால் ஆனது. நூற்றுமுப்பது அதிகாரங்களில் பத்துப்பத்துக் குறள்களாக ஆயிரத்து நூற்றுமுப்பது குறள்கள் அமைந்துள்ளன. இவ்வெண்ணிக்கைக்கு, திருக்குறட்பாத் தொகைக்கு அதிகமாகக் கூறுவதும், சமமாக அமைப்பதும் முறையன்றென்று மூன்றதிகாரம் (முப்பது பாட்டு) குறைத்து, நூற்று முப்பது அதிகாரத்தில் முடித்தனர்' எனக் காரணம் உரைப்பர் (ம.நெ.தி. அணிந்துரை. ப.3).

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் இந்நூலில் சுவாமிகள் அமைக்கின்றார். இந்நாற் பொருளிலும் நான்கு பொருளும் அமையச் சுவாமிகள் பாடியதும் இந்நூலின் தனிச்சிறப்பாகும். இதனை,

> அறமுதலாம் நான்கை அவிர்ஒவொன்றின் நான்கும்
> திறமுறவே காணத் தெரிவித்தான்

என்ற வரிகள் விவரிக்கின்றன. அதாவது அறம் என்னும் பிரிவில் அறத்திலறம் (5–1) அறத்துப் பொருள் (38–1) அறத்தின் இன்பம் (43–1) அறத்துமுத்தி (50–1) என 53 அதிகாரங்களில் நாற்பொருளும் அமைகின்றன.

பொருட்பால் 37 அதிகாரங்களை உடையதாக விளங்குகின்றது. இப்பிரிவில் பொருளில் அறம் (54–1) பொருளில் பொருள் (61–1) பொருளில் இன்பம் (85–1) பொருளில் முத்தி (89–1) என நாற்பொருளும் விரிக்கப்படுகின்றன.

(வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் - 100ஆம் ஆண்டு நினைவு நாள் கருத்தரங்கில் தஞ்சைத்தமிழ்ப் பல்கலை & கௌமார மடாலயம். இடம் : கௌமார மடாலயம், கோவை. நாள் - 26, 27, 28 ஜூன் 1998. வாசித்தளிக்கப்பட்ட கட்டுரை.)

இன்பத்துப்பாலில் முப்பத்தோரு அதிகாரங்கள் இடம் பெறுகின்றன. இன்பத்தறம் (92–1), இன்பப்பொருள் (110–1), இன்பத்தில் இன்பம் (112–1), இன்பத்தில் முத்தி (116–1) என நாற்பொருளும் கூறப்படுகின்றது.

ஆறு திகாரங்களையுடைய வீட்டுப்பாலில் வீட்டறமும் (124–1) வீட்டுப் பொருளும் (125–1) உரைத்து, ஏனையவற்றைக் குறிப்பாகப் பெறவைக்கிறார் சுவாமிகள் என்பர். (மேலது)

குறளும் மனுநெறித் திருநூலும்

மனுநெறித் திருநூல் நீதிமுறைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதாகும். இந்நூல் திருக்குறளைப் பின்பற்றி எழுதப்பட்டதாகும். இதனைச் சுவாமிகள்,

இப்பா ருலகறிய ஏழெழுவர் தம்மை வென்றோன்
முப்பால்வெண் பாட்டே முதல்

எனக் குறிப்பிடுகின்றார். மேலும்,

அறம் முதலா முன்னோர் அறைந்தபயன் நான்கின்
திறம் விரித்துச் சொல்லுந் தெளித்து

எனவும் குறிப்பிடுகின்றார். மனுநெறித் திருநூலின் பதிப்புரைப் பாயிரத்துள்,

அன்னவற்றுள் வள்ளுவர்சொல் அந்நூல் அடியொற்றிப்
பன்னருள்நூல் இந்தப் படிவு

என்ற வெண்பா வரிகள் குறள் வழி நூல் என்பதை உணர்த்துகின்றன. இதனை திருக்குறட் கருத்து, முன்னோர் நூற் கருத்து, தனதனுபவங்கள் ஆகிய பல கலந்த தொகுப்பே இந்த நூல் என்ற கருத்து அரண் செய்கிறது. (மேலது ப.5).

தாக்கக் கோட்பாட்டு ஆய்வு

ஒப்பீட்டாய்வுகளில் தாக்கக் கோட்பாட்டு ஆய்வு மேலோங்கியதோர் ஆய்வு முறையாகும். குறிப்பிட்ட ஓர் ஆசிரியரின் செல்வாக்கை நாம் பிறிதொரு மொழியில் பிறிதோர் இலக்கியத்தில் காணக்கூடும். குறிப்பிட்ட ஒரு நூலின் தாக்கம் யாரேனும் ஒருவரிடம் அமைதல்கூடும். இதுவே தாக்கக் கோட்பாடு எனப்படும்.

அமெரிக்காவில் தாக்கக் கோட்பாட்டிற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. எனினும் டி.எஸ்.எலியட் போன்றவர்களது கருத்துக்கள் தாக்க ஆய்வை வலியுறுத்துகின்றன. எக்கவிஞனும் அல்லது கலைஞனும் தானே தனித்து நிற்பது என்பதில்லை. அவனைத் தனியே நீங்கள் மதிப்பிட இயலாது.

ஒப்பாய்வுக்காக அவனை நீங்கள் முன்னையவர்களுடன் வைத்தே பார்க்க வேண்டும். (Eliot.T.S., Selected Prose, P.23) என்பார்.

தாக்கக்கோட்பாட்டு ஆய்வு பற்றிப் பிராவர் அவர்கள் முன்னையதை அடிப்படையாக வைத்தே பின்னையது கட்டுப்படுவது என்பதால், தாக்கம் பற்றிய ஆய்வும் பயனுடையதாகலாம் என விவாதிக்கின்றார். (Prawer. S.S.Comparative Literature, PP 51 - 52).

இக்கருத்துக்களின் வழி ஒப்பீட்டாய்வின், தாக்கக் கோட்பாட்டு அணுகுமுறை இங்குக் கைக்கொள்ளப்படுகிறது.

ஆய்வுப்பொருள்

திருக்குறள் நூலை முதனூலாகக் கொண்ட வழிநூல் இது. இம்மனுநெறித் திருநூலின் அதிகார வைப்புமுறை, குறட்கருத்துக்கள் எனத் தாக்கக் கோட்பாட்டு ஆய்விற்குப் பொருளாவதற்கு எண்ணற்ற களங்கள் உண்டு. எனினும் பக்கவரையறை காலம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு திருக்குறளிலும் மனுநெறித் திருநூலிலும் அமைகின்ற குடும்பம் என்ற கருத்து மட்டும் ஆய்வுப் பொருளாகின்றது.

திருக்குறள் அறத்துப்பாலில் வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு என்ற இரு அதிகாரங்கள் அமைகின்றன. மனுநெறித் திருநூலில் அறத்துப்பாலில் அறத்தின்பம் என்னும் பிரிவில் தாய், தந்தை, உடன்பிறந்தோர், மனைவி, மக்கள் என அடுத்தடுத்து ஐந்து அதிகாரங்கள் அமைகின்றன. இவ்விரு நூல்களிலும் உள்ள குடும்ப அமைப்பினை,

(1) தாய், தந்தை
(2) உடன் பிறந்தோர்
(3) மனைவி
(4) மக்கள்

என்ற தலைப்புக்களில் காண்போம்.

குறளில் தாய் தந்தை

திருக்குறளில் தாய், தந்தை எனத் தனியான அதிகார வைப்புமுறை ஏதுமில்லை. மாறாக மக்கட்பேறு அதிகாரத்திலும், ஆங்காங்கு ஓரிரு இடங்களிலும் தாய், தந்தை பற்றிச் சுட்டப்படுகின்றன.

மக்கட்பேறு அதிகாரத்தில், தனது மகனைச் சான்றோன் எனக்கேட்டு மகிழ்பவளாகத் (குறள் 69) தாய் குறிப்பிடுகின்றாள். கள்ளுண்ணாமை என்னும் அதிகாரத்தில், கள்ளுண்டவரைக் கண்டு ஈன்றாளும் முகம் சுளிப்பாள் (குறள் 923) எனப்படுகின்றது. பிறிதோரிடத்தில் ஈன்றாளின் பசியினைப் போக்குவதற்காகச் சான்றோர் பழிக்கும் வினையைச் செய்தல் கூடாது (குறள் 656) என வினைத்துய்மை பற்றித் திருக்குறள் குறிப்பிடுகின்றது.

மக்கட்பேறு அதிகாரத்தில் மூன்று குறள்களில் தந்தையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தன் மக்களுக்குக் கல்வியறிவூட்டுதல் தாயின் கடமை என்றும் (குறள் 67) நன்மகனைப் பெற்ற தந்தையைப் பிறர் பாராட்டுவர் என்றும் தம்மினும் தம் மக்கள் அறிவுடைமை தந்தைக்கு மகிழ்ச்சியைத் தரும் (குறள் 68) என்றும் குறிப்பிடப்படுகின்றது.

மனுநெறித் திருநூலில் தாய் தந்தை

அறத்தின்பம் பகுதியில் தாய், தந்தை எனத் தனித்தனி அதிகாரங்கள் உரைக்கப்படுகின்றன. அறவழிப்பட்ட இன்பம் என்பது நல்ல தாய் தந்தையரைப் பெறுவது எனச் சுவாமிகளால் சுட்டப்படுகின்றது.

தாய்மைக்கு ஏற்றம் தரும் பல கருத்துக்களைத் தமது நூலில் சுவாமிகள் குறிப்பிடுகின்றார். தாய் அருந்ததி போன்று கற்பில் சிறந்தவளாகவும் (ம.நெ.தி 43-1) பரிவுடன் பாலூட்டுபவளாகவும், (ம.நெ.தி.43-2) மக்கட்பேற்றிற்காக நெஞ்சுருகத் தவம் மேற்கொள்பவளாகவும் (ம.நெ.தி.43-3) இருத்தல் சேயினது நற்பேறு என்கின்றார். மேலும் பல சேய்கள் இருப்பினும், நற்சேயைத் தாய் போற்றுவாள் (ம.நெ.தி.43-4) எனவும், சேயருமை தெரியாத தாய் இல்லை என்பதனையும் (ம.நெ.தி.43) குறிப்பிடுகின்றார். கல்விச் சிறப்புடைய தாயைத் தந்தை என உயர்த்தி,

நிந்தை அறுங் கல்வி நெறியும் அறிதாயைத்
தந்தை என்றும் சொல்லத் தகும்.

(ம.நெ.தி.43-7)

என்று உரைக்கின்றார். தாய் தீய வழியில் சென்றால் திருத்தம் கடமை சேய்க்கு உண்டு எனக் (ம.நெ.தி.43-9) குறிப்பிடுகின்றார். இனி தந்தை பற்றிய கருத்துக்களைக் காண்போம்.

தந்தையானவன் நற்சிந்தனை, கல்வி, தெய்வபக்தி முதலிய பண்புகள் அமைந்தவனாகவும் அறிஞனாகவும் இருத்தல் வேண்டும் (ம. நெ. தி. 44 1,2) என்பது மனுநெறித்திருநூல். தன்னைக் குருவாகவும், தனது சொல் கேட்பவனாகவும் மக்களை உடைய தந்தை நிலத்தில் புகழ் பெறுவான் (ம. நெ. தி. 44 – 3, 4) எனவும், நற்றந்தை கல்வியும், தவமும் தீயது என்று உரைக்கமாட்டான் எனவும் (ம. நெ. தி.44–5) தந்தையின் மனம் மகிழத் தக்க மொழி கூறுபவன், தந்தைக்கு உபதேசித்த முருகப்பெருமானைப் போன்றவன் எனவும் (ம. நெ. தி. 44–6) குறிப்பிடுகின்றது.

தகுதியுடைய தந்தை தம்மினும் சிறந்த மக்களைப் பெறுவான் (ம. நெ.தி.44–7). சிறந்த மக்களைப் பெற்ற தந்தை இழி தொழில் செய்யான் (ம.நெ.தி.44–8). தந்தை நல் வழியில் சென்றால் மக்கள் நல்வழி கூறித்திருத்தலாம் (ம. நெ. தி. 44–9) தந்தையினைத் தாய் அறிவாள் என்பது முன்னைய நூல் பொருளாகும் (ம. நெ. தி.44–10) இவ்வாறு தந்தை என்னும் அதிகாரத்துள் குறிப்பிடப்படுகின்றன.

ஒப்பீட்டு நோக்கு

திருக்குறளில் தாய், ஈன்றாள் என்றும் திருநூலில், தாய் எனவும் குறிப்பிடப்படுகின்றது. திருக்குறளில் மகனின் சான்றாண்மையைக் கேட்டு உவந்த தாய் திருநூலில் நல்சேயைப் போற்றுபவளாக விளங்குகிறாள்.

சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க எனவுரைக்கும் குறட் கருத்து பாவ உணவூட்டல் அன்ன பண்புடைய தாயை நற்சேய் திருத்தலாம் (ம. நெ. தி. 43–10) என்றாகிறது. கல்விச் சிறப்புடைய தாயைத் தந்தையாகப் போற்றலாம் எனப் பெண்மையின் சிறப்பிற்கு ஏற்றம் தருகின்றார் சுவாமிகள். தீயநெறி உடையவளாகத் தாயிருந்தால், சேய் திருத்தலாம் என்ற குறிப்பின் வழி தாயின் பண்புநலன்கள் திருநூலில் குறைவுபடுத்தப்படுகின்றன. வள்ளுவர் காட்டும் தாய் நற்றாயாக மட்டுமே விளங்குகின்றாள்.

திருக்குறள் காட்டும் தந்தை மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை உடையவனாவான். மனுநெறித் திருநூலில் நற்பண்புகளை உடையவனாகவும், ஆசானாகவும் உயர்வு பெறுகின்றான்.

தம்மினும் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது (குறள் 68)

என்னும் திருக்குறள்,

தகப்பன் களிகூரத் தக்கமொழி கொள்வான்
குகப்பெருமான் போலும் குரு (ம.நெ.தி.44-6)

என மனுநெறித் திருநூலில் ஏற்றம் பெறுகின்றது.

ஒப்பீட்டு நோக்கில் உடன்பிறந்தோர்

திருக்குறளில் உடன்பிறந்தோர் பற்றிய செய்திகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. சுவாமிகள் குடும்பம் என்ற அமைப்பில் உடன்பிறந்தோர்களைப் பற்றிப் பத்துக் குறள்களில் கருத்துக்களை வரிசைப்படுத்துகின்றார்.

மரத்தில் உள்ள காய்க் கொத்துக்கள் போல உடன்பிறந்தவர்கள் ஒன்றியிருத்தல் வேண்டும் எனவும் (ம. நெ. தி. 45–1) உடலுறுப்புகள் போல உடன்பிறந்தோரைத் தாங்கல் கடமை எனவும் (ம.நெ.தி. 45–2) சுவாமிகள் குறிப்பிடுகின்றார். மேலும், மூத்தோரைப் பெற்றோராய்ப் போற்றுதல் வேண்டும் என்பதை,

முன்னானைத் தந்தைஒப்ப மூத்தாளைத் தாயார்ஒப்பப்
பின்னோர் நினைத்தொழுகல் பீடு (ம.நெதி. 45 – 3)

எனக் குறிப்பிடுகின்றார். ஒருவர் பெற்ற நன்மையை உடன்பிறந்தோர் அனைவரும் பெற்றுச் சிறத்தல் வேண்டும் என்பதும் (ம.நெ.தி. 45 – 4) அறிஞர்களை உடன்பிறந்தாராகக் கொள்வது பாவத்தினைப் போக்கும் எனவும் (ம.நெ.தி. 45 – 10) சுவாமிகள் விரித்துரைப்பார். உடன்பிறந்தாருக்குள் சண்டை ஏற்படுவது உலகவழக்கு என்பதனையும் (ம.நெ.தி. 45 – 6) சுட்டுகின்றார்.

மேலும், இந்தியாவின் பழம்பெரும் புராணங்களின் வழி உடன்பிறப்பின் சிறப்பினை வெளிப்படுத்துகின்றார்.

உடன்பிறந்தாரது ஒற்றுமையால் வாழ்வும் தாழ்வும் ஏற்படும் என்பதை மகாபாரதச் சகோதர வாழ்வின்வழி,

அறத்தில்ஒத்த ஐவர் அநீதியிற்சார் பல்லோர்
இறத்தல்கண்டு வாழ்ந்தார் இனிது (ம.நெ.தி. 45 – 5)

என விளக்குகின்றார். நல்வழி கூறியும் ஒப்பாத சகோதரரை விபீடணன் போல விட்டுவிடுவது முறையானது எனச்சுட்டும் சுவாமிகள், சகோதரனுக்காக உயிர்துறந்த சிங்கமகாசுரனையும் கும்பகர்ணனையும் போற்றுகிறார்.

இவ்வாறு சுவாமிகள் குடும்பம் என்ற அமைப்பில் உறவுகள் சீர்பட, உடன்பிறந்தாரது ஒற்றுமையையும், அன்பினையும் வலியுறுத்துகின்றார்.

திருக்குறளில் வாழ்க்கைத் துணை

திருக்குறளில் வாழ்க்கைத் துணை, இல்லவள், மனைமாட்சி என மனைவி குறிப்பிடப்படுகின்றாள். மனைவி நற்பண்புகளை உடையவளாகவும் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்துபவளாகவும், கற்புடையவளாகவும் இருத்தல் வேண்டும். மனைவி, கணவனைத் தெய்வமாகத் தொழுபவளாகவும், கணவனைப் போற்றுபவளாகவும் நல்ல மக்களைப் பெறுபவளாகவும் இருத்தல் வேண்டும். புகழ் சேர்க்கும் மனைவியோடு வாழ்க்கை இல்லாதவருக்குப் பெருமையான வாழ்க்கை இல்லை (வாழ்க்கைத்துணை நலம் 51 – 60) இவ்வாறு திருக்குறளில், வாழ்க்கைத்துணை என்பது மனைவியின் கடமையைச் சுட்டுவதாகவும், பெண்ணின் பெருமையைக் காட்டுவதாகவும் உள்ளது.

மனுநெறித் திருநூலில் மனைவி

சுவாமிகள் மனை என மனைவியைக் குறிப்பிடுகின்றார். மனைவி என்பவள் கணவனின் பாதி (ம.நெ.தி. 46–1) என்றும், மனைவியோடு வாழும் வாழ்வு சிறப்புடையது என்றும் (ம.நெ.தி. 46 –2) நல்ல மனைவியுடையோரைப் பிறர் பாராட்டுவர் (ம.நெ.தி. 46–5) எனவும் சுட்டுகின்றார்.

மானம் காக்கும் மனைவியின் தோளினை அணைப்பவன், ஈனம் சிறிதும் இல்லாதவன் (ம.நெ.தி. 46–6) எனவும், கற்புடையளாக இருத்தல் மனைவியின் கடமை எனவும் (ம.நெ.தி. 46–4) சுவாமிகள் குறிப்பிடுகின்றார். இல்லறத்தில் மட்டுமல்லாது துறவற வாழ்க்கையிலும் மனைவி கணவனுக்கு உறுதுணையாவாள் என்பதை,

> உவக்கும் இன்பம்நல்கி, உடன்போய்ச்சில் மாதர்
> தவத்தினிலும் பங்குகைக் கொண்டார்

என்பார். இவ்வாறு துறவறத்திற்கு மனைவி துணையிருத்தல் என்பது, சுவாமிகளது சொந்த வாழ்க்கையின் எதிரொளிப்பு எனலாம். அடிகளாரின் துணைவியார் சுந்தரத்தம்மையார் மூன்று குழந்தைகளுக்குப் பிறகு அடிகளாரிடம் கல்லாடை பெற்றுத் துறவற நெறியில் நின்றார் (மோகனரங்கன் கோ, சந்த அமைப்பு சிறப்பாய்வு, ப.94) என்ற குறிப்பு, இந்தக் குறட்பாவோடு இணைத்து எண்ணத்தக்கதாகும்.

மேலும், கணவனால் தானமாக அளிக்கப்பட்டால், அதனை ஏற்பது மனைவியின் மாட்சியைப் பெருக்கும் (ம.நெ.தி. 46 – 8) எனப் பெரிய புராணத்து இயற்கை நாயனாரது செயலினைச் சுட்டுகின்றார். நல்ல மனைவியைக் குறைகாணும் கணவனைப் பேய் (ம.நெ.தி. 46 – 10) எனச் சுவாமிகள் கடிந்து பேசுவார்.

ஒப்பீட்டு நோக்கு

மனைவி பற்றிய கருத்துக்களில் குறட்கருத்துக்களை அடியொற்றிச் சுவாமிகள் தமது நூலில் சிலவற்றைக் குறிப்பிடுகின்றார். வாழ்க்கையின் துணையாக விளங்கும் மனைவி, நற்பண்புகளை உடையவளாக, கணவனது வருவாய்க்குத் தக உள்ளாள் என்ற குறட்கருத்து,

ஆவதற்குரியாள் அறத்தில்ஒரு பாதி கொண்டு
பாவமுற்றுந் தற்சேர்ப் பவள் (ம.நெ.தி. 46 – 1)

எனத் திருநூலில் குறிப்பிடப்படுகின்றது.

மனைவியின் சிறப்பினை இருநூல்களும் போற்றுகின்றன. மாண்புடைய மனைவியைப் பெற்றால், வாழ்வில் சிறப்பும் உயர்வும் உண்டு என்ற குறட் கருத்து, மனைவியை விடச் சிறப்பு, ஒருவரது வாழ்க்கையில் இல்லை எனத் திருநூலில் குறிப்பிடப்படுகின்றது.

மனைவியின் கற்பினை, 'நிறைகாக்கும் காப்பு' எனக் குறள் குறிப்பிட, 'பொற்புமதன் நேர்வரினும் புத்தி நடுமாறாக் கற்பினைத்' திருநூல் வலியுறுத்துகின்றது. சிறந்த மனைவியைப் பெறாதவர் பகைவர் முன் பெருமிதமான நடை போட முடியாது என்ற குறட்கருத்து,

மானம் புரக்கும் மனைதோள் அணைவானே
ஈனம் சிறிதும் இலான் (ம.நெ.தி.46–6)

எனத் திருநூலில் சிறப்புறுகின்றது.

இவை, தவிர, மனுநெறித் திருநூல், மனைவி கணவனது துறவறத்திற்குத் துணையாகவும், கணவனது தர்மத்தினை ஏற்பவளாகவும், இருத்தல் வேண்டும் என்பார் மேலும், பெண்மைக்கு ஏற்றம் கொடுக்கும் முறையில்,

தன்னை தவயவம்நேர் தன்மையுறு தையனல்வாள்
பின்னமுறக் காண்பவனோர் பேய் (ம.நெ.தி. 46 –10)

எனப் பெண்மையினைக் குறை கூறும் கணவனைப் பேய் எனக் கடிந்து பேசுவது திநூலின் சிறப்பாகும்.

குறள் காட்டும் மக்கட்பேறு

ஒருவன் பெறுகின்ற பேறுகளில் தலையாயது மக்கட்பேறு என்பது வள்ளுவரின் கருத்தாகும். நன்மக்களைப் பெற்றால் எழுபிறப்பினும் துன்பங்கள் சேரா என்றும், நன்மக்களைப் பெறுதல் அவரவர் வினையின் பலன் என்றும் வள்ளுவர் உரைக்கின்றார் மேலும் மக்கட்பேற்றினை குழந்தைப்பருவச் செயல்கள் வழி பின்வருமாறு உரைக்கின்றார். தம்மக்கள் சொல் யாழினும், குழலினும் இனிமை உடையது எனவும், அவர்தம் சிறுகைபட்ட உணவு அமிழ்தினும் சிறந்தது எனவும், மக்கள் உடலைத் தீண்டுவது இன்பம் நல்கும் எனவும் உரைக்கின்றார். (குளற் மக்கட்பேறு 61 –70).

மனுநெறித் திருநூலில் மக்கள்

ஒருவன் பெற்ற உயர்வாக, ஆண், பெண் என்ற இருவகை நன்மகவையும் (ம.நெ.தி. 47 – 1) சுவாமிகள் சுட்டுகின்றார்.

தந்தைக்குப் புகழ்து சேர்க்கும் மகன், வீட்டின்பம் தருவதற்கான வித்து என்றும், மாதவம் செய்வோருக்கும் வீட்டினை நல்குவது மக்கட் செல்வம் என்றும் (ம.நெ.தி. 47 – 3, 4) சுவாமிகள் உரைக்கின்றார்.

கல்வியுடையவராகவும், (ம.நெ.தி. 47 – 8) அறத்தில் வழுவாதவராகவும் (ம.நெ.தி. 47 – 10) உள்ள மக்களைப் பெற்றவர் எல்லாச் செல்வமும் பெற்வராவார் என்கிறார். மேலும், பெண்மகவின் பெருமையும் சுவாமிகளால் இருகுறள்களில் சுட்டப்படுகின்றது.

தவம் உடையாரின் தோளினை மருவும் பெண்ணைப் பெறுதல் சிறப்பு என்றும் (ம.நெ.தி.47 – 5), பெண்மகவின் காரணமாகச் சிறப்பு உண்டு என்பதனைத் தடாதகைப் பிராட்டி தன் தாயாருக்கு இறந்த கணவனுடன் ஏழுகடலில் நீராடும் சிறப்பினைப் பெற்றுத் தந்தமையைக் குறிப்பிட்டுத் (ம.நெ.தி. 47 – 6) தெளிவுறுத்துகின்றார்.

ஒப்பீட்டு நோக்கு

திருக்குறளில் மக்களைப் பெறுதல் பேறாகக் குறிப்பிடப்படுகின்றது. மக்கள்தம் முழலைப் பருவச் செயல்கள் சிறப்படையனவாகச் சுட்டப்படுகின்றன. சிறந்த மக்களைப் பெறுவது அவரவர் வினைப்பயன் என்றும், மக்கட்பேறு ஏழுபிறப்பின் தீமையையும் தீர்க்கும் என்றும் உரைக்கப்படுகின்றது.

மனுநெறித் திருநூலில் மக்களைப் பெறுவது வீடுபேற்றிற்கு வழி எனச் சுட்டப்படுகின்றது. குறிப்பாக ஆண்மகன் வீட்டிற்கு வித்து என வேத மரபின் வழி குறிப்பிடும் சுவாமிகள், பெண்மக்களது சிறப்பினையும் குறிப்பிடுகின்றார்.

தொகுப்புரை

வள்ளுவரின் வாய்மொழியை முதனூலாகக் கொண்ட மனுநெறித் திருநூல், குறட் கருத்துக்களை அடியொற்றியும், புதியதாகச் சிலவற்றைப் பெற்றும் விளங்குகின்றது. இதனை நேர் மற்றும் மறைமுகத் தாக்கம் (Clandio, Guillen, Literatuse as sysstem, P.61) என்பர். ஒப்பீட்டின் வழி பெறப்படாத கருத்துக்கள் வருமாறு.

திருக்குறளில் வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு என்ற தலைப்புகளில் கருத்துக்கள் இடம்பெறுகின்றன. மனுநெறித் திருநூலில், தாய், தந்தை, உடன்பிறந்தோர், மனைவி, மக்கள் எனக் குடும்ப அமைப்பு முறை அடுத்தடுத்த அதிகாரங்களில் இடம்பெறுகின்றன.

திருக்குறளில் தாய், மக்களின் நற்பண்புகளுக்காகச் சுட்டப்படுகின்றாள். திருநூலில் தாய் பெண்மையின் பிரதிநிதியாகக் குறிப்பிடப்படுகின்றாள். கல்வியறிவுடைய தாய், தந்தையாக ஏற்றம் பெறுகின்றாள். தீய நெறியுடைய தாய் சேயால் திருத்தப்படலாம் என்ற குறிப்பின் வழி தாயின் பண்புநலன்கள் குறைவுபடுத்தப்படுகின்றன. வள்ளுவர் காட்டும் தாய் நற்பண்பின் உறைவிடமானவள்.

குறள் காட்டும் தந்தை, மக்களுக்குக் கடமையாற்றுபவனாக உள்ளான். திருநூலில் அறிவுடையவனாகச் சுட்டப்படும் தந்தை, திருநெறியில் சென்றால் சிறப்பு என்ற குறிப்பு உள்ளது.

உடன்பிறந்தோர் பற்றிய செய்திகள், குறளில் குறிப்பிடப்படவில்லை. திருநூலில் உடன்பிறந்தோர் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பதனைப் பத்து வெண்பாக்களில் சுவாமிகள் குறிப்பிடுவது புதுமையானதாகும்.

திருக்குறள் காட்டும் மனைவி வாழ்க்கையின் துணை, கற்புடையவள், கணவனைக் காப்பவள், தொழுபவள், மக்களைப் பெறுபவள். திருநூலில் மனைவி குறள் வழி நின்றாலும், கணவனது துறவறத்திற்குத் துணையாகின்றாள். மனைவியைக் குறைகாணும் கணவனைக் கடிவதும் திருநூலின் புதுக்கருத்தாகும்.

குறளில் மக்களைப் பெறுவது பேறாகக் குறிப்பிடப்படுகின்றது. மக்கள்தம் மழலைப் பருவச் செயல்கள் கட்டப்படுகின்றன. திருநூலில், வேதமரபின்வழி, ஆண்மகன் வீடுபேறு நல்கும் வித்தாகின்றான். எனினும், பெண்மகவிற்கும் சுவாமிகள் ஏற்றம் தருவதனை அறியமுடிகின்றது.

மேற்கூறிய முடிவுகளின் வழி குறளின் தாக்கததால், தண்டபாணி சுவாமிகள் மனுநெறித் திருநூலைப் படைத்தாலும், காலத்துக்கேற்பப் புதுமைக் கருத்துக்களையும் தமது படைப்பில் குறிப்பிடுவது கருதத்தக்கதாகும்.

துணை நூற்கள்

1. தண்டபாணி சுவாமிகள், மனுநெறித்திருநூல், கௌமார மடாலயம், சிரவணபுரம், 1964.
2. --------, வருக்கக்குறள் மூலமும் உரையும், கௌமார மடாலயம், 1988.
3. மோகனரங்கன் கோ, சந்த அமைப்பு – சிறப்பாய்வு, வசந்தா பதிப்பகம், சென்னை 1991.
4. பட்டுச்சாமி ஓதுவார், தி.பதி.திருக்குறள் – உரைக்கொத்து – அறத்துப்பால், திருப்பனந்தாள் மடத்து வெளியீடு, 1957.
5. Claudio. Guillen, Literature as System, Princeton, 1971.
6. Eliot. T.S., Selected Prose, London, 1953.
7. Prawer.S.S., Comparative Literary Studies, London, 1973.

சுருக்க விளக்கம்

ம.நெ.தி. மனுநெறித் திருநூல்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

பாரதியார் ஆய்வு இருக்கை

வள்ளல் உள்ளம் கொண்ட நல்லவர் வழங்கிய நன்கொடையைக் கொண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் பாரதியார் பற்றி ஆராய ஏற்பாடு செய்து உள்ளோம். அன்னோர் வழங்கிய நிதியை வைப்பு நிதியாக அமைத்துப் பாரதியாரைப் பற்றி எழுதப்பெறும் சிறந்த ஆராய்ச்சி எழுத்துரைகளுக்கு ஒவ்வொராண்டும் பரிசு வழங்கத் தீர்மானித்து உள்ளோம்.

ஒவ்வொரு சிறந்த கட்டுரைக்கும் ரூபாய் 3000 பரிசு வழங்கப் பெறும். எழுத்துரைகளுக்கு உரிய தலைப்புகள்.

1. பாரதியின் மொழிக் கருத்தியலும் மொழியாட்சியும்
2. பாரதியின் கலை இலக்கியக் கோட்பாடுகள்
3. சமகாலத் தத்துவப் போக்குகளும் பாரதியும்

மேற்கண்ட தலைப்புகளில் எந்தத் தலைப்பிலும் ஆய்வுரை எழுதலாம்.

பக்க அளவு : 50 பக்கங்களுக்கு மேல் 100 பக்கங்களுக்குள்
3 தட்டச்சிட்ட படிகள் வழங்குதல் வேண்டும்.

விரும்பினால் ஒருவரே மூன்று தலைப்பிலும் கட்டுரை வழங்கலாம். ஒவ்வொரு தலைப்பிலும் சிறந்த கட்டுரையை நடுவர் குழு தெரிவு செய்யும்.

நடுவர்களின் முடிவே இறுதியாகும்.

போட்டிக்குக் கட்டுரையைப் பதிவஞ்சலில் விடுத்து வைக்க நிறைவு நாள் நவம்பர் 15, 1998

கட்டுரையை விடுக்க வேண்டிய முகவரி.

பாரதி ஆய்வுக் கட்டுரைப் போட்டி
துணைவேந்தர் அலுவலகம்
மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி 627 012.

தொழுதல் என்ற தமிழ்ச்சொல்

முனைவர். சு.சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம்,
சென்னை - 5.

தொழுதல், கும்பிடல், வணங்கல் என்ற சொற்களை வேறுபாடின்றி இன்று பயன்படுத்துகிறோம்.

ஆனால், இச்சொற்களிடையே பொருள் வேறுபாடுகள் உள்ளன.

எடுத்துக்காட்டாகத் தொழுதல் என்றால், கீழே, மண்டியிட்டு, குனிந்து கும்பிடவே ஆகும்.

மண்டியிட்டுக் குனியவில்லையாயின், அது தொழுதல் ஆகாது! இதுவே தமிழ்ச்சொல்லின் சட்டம்.

தொழுதல் என்ற சொல்லை இவண் ஆய்வகம்.

தொழுதல்	–	தொழு + தல்
தொடு	–	பகுதி
தல்	–	தொழிற்பெயர் விகுதி

தொழுதல் என்ற பெயர்ச்சொல்லின் இன்னொரு வடிவம் தொழுவு.

"கால்வாய்த் தொழுவு" என்று தமது ஆசாரக்கோவையில் பெருவாயில் முள்ளியார் எழுதிக் காட்டுகிறார்.

இங்கு, காலில் விழுந்து வணங்குதலைத் தொழுவு என்ற சொல்லால் குறிக்கப்பட்டிருத்தலை நோக்கலாம். தொழுதல் பற்றிய நம் கருத்துக்குப் பெருவாயில் முள்ளியாரின் கருத்து அரண்செய்கிறது.

தொழுவு என்ற சொல்லையும் சிறிதி ஆய்வோம்.

தொழுவு	–	தொழு + வ் + உ
தொழு	–	பகுதி
வ்	–	உடம்படுமெய்
உ	–	சாரியை விகுதி

'மாட்டுத் தொழுவம்' என்கிறோம். மாடுகள், கீழே சாய்ந்து, படுத்துக் கிடக்கும் இடம் என்பதால், அது 'தொழு' என்பதன் அடிப்படையில், தொழுவம் எனச் சுட்டப்பட்டது.

தொழுவம்	–	தொழு + வ் + அம்
தொழு	–	பகுதி
வ்	–	உடம்படுமெய்
அம்	–	சாரியை

தொழு என்பதற்கு வேர்ச்சொல் தொ ஆகும். தொண்டு (hole) தொள்ளை (hole) முதலிய சொற்களில் இதே வேர்தான் உள்ளது. வளைதல், குழிவாதல் என்றெல்லாம் பொருண்மைகளைச் சுட்ட இந்த வேரால் இயலும்.

ஆகவே, இந்த வேர்ச்சொல் ஆய்வின்படியும், தொழுதல் என்றால், மண்டியிட்டுக் கீழே விழுந்து வணங்குதலையே குறிக்கும் என்பது உறுதியாகிறது.

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு.நா.கலியமூர்த்தி,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.ச.இராமநாதன்,
முன்னாள் தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

திரு.த.கோ.ப.கோவிந்தசாமி, பி.காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.கலைமாச்செல்வர் எஸ்.டி காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் அரசுச் செயலாளர், சென்னை.

திரு.சிலம்பொலி சு.செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.,
சென்னை.

திரு.முனைவர்.கி.கருணாகரன்,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.தமிழண்ணல், எம்.ஏ.,பிஎச்.டி.,
மதுரை - 625 020.

திரு.முனைவர்.மு.கோவிந்தராசன்,
சென்னை.

திரு.முனைவர்.சோ.ந.கந்தசாமி, எம்.ஏ.,பி.லிட்.,பிஎச்.டி.,
முன்னாள் இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.மா.இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

திரு.தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு.முனைவர்.ஈரோடு தமிழன்பன், எம்.ஏ., பிஎச்.டி.,
சென்னை.

திரு.பேராசிரியர் பி.விருத்தாசலம், எம்.ஏ.,
முன்னாள் முதல்வர், த.உ.க. கலைக்கல்லூரி.

திரு.முனைவர்.இரா.குருநாதன்,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு.புலவர்.செ.இராசு, எம்.ஏ.,
இணைப்பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

திரு.புலவர்.ஆ.பாலன், எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
துணை முதல்வர், த.உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

திரு.புலவர்.மீனா.இராமதாசு,எம்.ஏ., எம்.எட்.,
முன்னாள் தலைமைத் தமிழாசிரியர், உ.மே. நி. பள்ளி

திரு.முனைவர்.பா.மதிவாணன், எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

Regd. No. TN/TJ/24 நூல் அஞ்சல்

பெறுநர்

திருமிகு

நூலகர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 600 005.

ஆசிரியர்
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் ஆசிரியர் – ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ. 100 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச் சங்க மணிவிழா மலர்	ரூ. 80 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த.வே.உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60 00
இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ. 6 00
பரணர் – ஆசிரியா.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை	ரூ. 35 00
பாயிர விருத்தி – ஆசிரியர் அரசஞ்.சண்முகனார்	ரூ. 60 00
அறிவியல் தமிழ்	ரூ. 125 00
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்	ரூ. 100 00

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

வெளியிடுபவர் : திரு.நா.கலியமூர்த்தி
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : இரா.வைஜெயந்திமாலா, லக்மி பிரிண்டர்ஸ்,
1086, காக்கா வட்டாரம், தஞ்சாவூர் - 613 009.